செந்தமிழ்

தொகுதி XXXIII. Sep-oct 1936

JL
O.31 ma2M, N0264
N36. 38.11
215054

21 SEP 1[illegible]
MADRA[illegible]

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி-௩௩.] தாதுஸ்ரீ புரட்டாசிமீ [பகுதி-௧௧.
Vol. XXXIII. *September—October 1936.* No. 11.

உள்ளுறை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு:- } ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் உஎஎ—உஅச
நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். உஅரு—உகூஉ
இரண்டாம் இராஜாதிராஜன்:— ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர் உகூ௩—[illegible]
ஆழ்வானும் புழாவும்:— ஸ்ரீமத். க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார். [illegible]
[illegible]:— ஸ்ரீமத். V. S [illegible] B.A. B.L. [illegible]
ஒலியெழுத்துக்கும் உருவமுண்டு:— } ,, T. R. வீரராகவையங்கார் வித்வான்; பண்டிதர். ௩௧௩—௩௧௬
சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 113—120
குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 345—352

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

[illegible]ANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and
[illegible]RAYANA IYENGAR at the Tamil Sangam Power Press,
[illegible] 54, New Jail Road, Madura.

215054

உ

## ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு | | | |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | 0 | 1 | 0 |

21 SEP 1936
MADRAS

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௩.] தாதுஸு புரட்டாசிமீ [பகுதி-௧௧.
Vol. XXXIII. September—October 1936. No. 11.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௨௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### பாசப்படலம்

இந்திரசித்து எய்த பிரமாத்திரம் பாம்புவடிவாகிக் கயிறுபோல அனுமானைக் கட்டியதைக் கூறுவது. (பாசம் – கயிறு.)

### இந்திரசித்து வீரம் கூறித் தேரில் ஏறல்

[ இந்திரசித்து, அனுமானால் அட்சகுமாரன் கொல்லப்பட்டானென்று கேட்டபோது, கோபமும் சோபமும் கூர, நெஞ்சு கொதிக்க, மூக்கு சுடுமூச்சு விட, மேனி வெதும்பி வியர்க்க, வீரவாதம் கூறித் தேரின்மீது ஏறினான்.]

### தேய்ந்தது, தம்பி உடலன்று, தந்தை புகழென்று வருந்தல்

123. தம்பியை உன்னுந் தோறும் தாரைநீர் ததும்பும் கண்ணன்,
வம்பியல் சிலையை நோக்கி, வாய்மடித் துருத்து நக்கான்,
'கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினாற் குரங்கா ஆற்றல்
எம்பியோதேய்ந்தான்! எந்தைபுகழன்றோதேய்ந்த!'தென்றான்.

இ-ள். (இரதத்தில் ஏறிய இந்திரசித்து,) தம்பி (இறந்த செய்தி) யை எண்ணும்போதெல்லாம் தாரை (தாரையாக வடிகின்ற கண்) நீர் பொங்குங் கண்ணினான் (ஆகி இந்த வில் இருந்து என் பயன்! என் தம்பி உயிரைக் காவாதுபோயிற்றே! யென்று தன்) வில்லை உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு, கோபித்துப் பார்த்து, (இந்தப் பயனற்ற, பரிகாசத்துக்கிடமான வில்லைத் தாங்கிக்கொண்டிருக்கிறேனேயென்று தன்னைத் தானே எள்ளி) ச் சிரித்தான். 'மரக்கொம்புகளில் வாழ்தலுடைய (அற்பக்) குரங்கினால் (தேய்க்கப்பட்டுத்) தாழாத வலிபடைத்திருந்த என் தம்பியோ தேய்ந்தான்! என் தந்தைபுகழன்றோ தேய்ந்தது!' என்று கூறினான்.

வம்பு-கயிறு - வில்லின் நாணியாகிய கயிறு. சிலை - வில். வாய்மடித்தல், கோபமெய்ப்பாடு. உருத்தல்-கோபித்தல். நகுதல்-சிரித்தல். நக்கான்-சிரித்தான். கொம்பு-மரக்கொம்பு. இயலல்-உலாவல்.(தமிழக.) மாயம்-மறைவு. மாய் (-மறை) பகுதி, அம் தொழிற்பெயர்விகுதி. மாயம், வஞ்சகமும் நிலையாமையுமாம். குரங்குதல் - தாழ்தல்; வளைதல். மாயவாழ்க்கை - எதிர்ப்பாரைக் கண்டால் ஓடி ஒளியும் இயல்புடைய வாழ்க்கை; வஞ்சகமாகச் சீவித்தல்; மனிதர்போல மனையில் ஓரிடத்தில் நிலையாக வாழாமல் நிலையில்லாது வாழ்தல்.

குரங்கினால் தேய்ந்தது, என்தம்பியோவென்னில், அன்று; மற்று யாதெனில், என் தந்தை புகழ் என்பது பட, 'எம்பியோ தேய்ந்தான்! எந்தை புகழன்றோ தேய்ந்த! தென்றான்' என்றார். தம்பியின் சாவினும் தந்தை புகழின் தேய்வு அதிக விசனத்துக் குரியதென்றெண்ணினானென்பது கருத்து.

போர்க்களம் அம்மியாக, அட்சகுமாரனது உடலின் சதை அரிசியாக, இரத்தம் நீராக, எலும்புக்கூடு அம்மிக் குழவியாகத் 'தேய்த்தான் ஊழியின் உலகேழ் தேயினும் ஒருதன் புகழ் இறை



தேயாதான்' என்று முன் கவிக்கூற்றாகக் கூறியதை அநுவதித்து, இப்போது, இந்திரசித்தின்கூற்றாக 'எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றோ தேய்ந்த தென்றான்' என்றாரென்பது கவனிக்கத்தக்கது.

## தம்பி சாவுக்காகத் தந்தையிடம் துக்கங்கொண்டாடிக் குரங்கைப் பிடித்துக்கொண்டுவருவதாகக் கூறிப் போதல்

[இந்திரசித்து, இராவணனை அடைந்து, தாளில் விழுந்து தம்பியிறந்ததற்காக அழுதான். தந்தை, மைந்தனை வாரியெடுத்து, மார்பிலணைத்துத் தானும் அழுதான். பின்பு, மகன், தந்தையை நோக்கி 'அந்தக் குரங்கு கடலைக் கடந்து அசோகவனத்தை அழித்த அசாதாரண ஆற்றலுடையதென அறிந்திருந்தும், ஆழ்ந்து ஆலோசியாமல், அதனிடம் கூட்டங்கூட்டமாக அரக்கரை அனுப்பினாய். ஆதலால், கொன்றனை நீயே யன்றோ அரக்கர்தங் குழுவை* என்றான்.

என்றவன், மேலும் கூறுவானாய், 'கிங்கரர் சம்புமாலி பஞ்ச சேனாபதிகள் என்பவர்களோடு சென்ற சேனாவீர ரெல்லாரும் மாண்டாரேயன்றி மீண்டார் ஒருவருமில்லை என்றால், அந்தக் குரங்கை என் என்பது! திரிமூர்த்திகளின் ஒருமூர்த்த† மென்றன்றோ செப்பவேண்டும்! ஆயினும், நீ கவலையின்றி இங்கே இருப்பாயாக. யான் சென்று அதனை எளிதாகப் பிடித்துக் கொண்டுவந்து கொடுப்பேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.]

## சேனைச் சிறப்பு

124. உடைந்தவல் விருள்தோற் றுப்பல் உருக்கொடக் கதிர்க்கு ழாங்கள்
மிடைந்தன மிலைச்சி யாங்கு மெய்யணி பலவும் மின்னக்
குடைந்துவெம் பகைவர் ஊன்தோய் கொற்றப்போர் வாள்வில் வீச,
அடைந்த, கார் அரக்கர் தானை அகலிடம் இடம்இன் றென்ன.

---

*குழு – கூட்டம். †மூர்த்தம் – வடிவம்.

இ-ள். (முன் சூரியனுக்குத்) தோற்றுப்போன இருட்டு, (அந்தச் சூரியனை வெல்லத்) தவஞ்செய்து, (செய்த தவத்தின் பயனாகப்) பல (கரிய) ரூபங்கொண்டு (வென்று, கவர்ந்த சூரிய) கிரணக் கற்றைகளை (வெற்றிச் சின்னங்களாக) அணிந்து கொண்டாற்போல, (அந்தக் கரியரூபமான) உடம்புகளிலே பல (வகை) ஆபரணங்கள் பிரகாசிக்கக் கரிய (ரூபிகளான) இராக்கதர் (கூடியான) சேனை, பூமி இடம் போதாதென்று சொல்லும்படி (பெருங்கூட்டமாக இந்திரசித்தைச் சூழ வந்து) சேர்ந்தது.

உடைதல் - தோல்வியடைதல். கதிர் - கிரணம். குழாம் - கூட்டம். மிடைந்தன மிலைச்சியாங்கு – நெருங்கினவாக அணிந்தாற் போல. வெம் பகைவர் ஊன்தோய் கொற்றம் போர் வாள் வில் வீச – கொடிய பகைவருடைய உடம்புகளுள் முழுகிய வெற்றியை யுடைய யுத்தத்துக்குரிய வாள்கள் ஒளியை வீச. 'பூதகணத் தரசேந்தி அனல்நின்று புறப்பட்ட' என்பதில், 'புறப்பட்டது' என்பது, 'புறப்பட்ட' என வந்ததுபோல, 'அடைந்தது' என்பது, 'அடைந்த' என, 'து' என்னும் ஒன்றன்பால் வினைவிகுதி தொக்கு வந்தது. அகலிடம் – பூமி.

கரிய இராக்கதருக்கு இருட்டின் துண்டங்களும் அந்த இராக்கதர் ஒன்றுகூடிய திரளான இராட்சச சேனைக்குத் துண்டப் படாத இருட்பரப்பும் இராக்கதர் அணிந்திருந்த ஆபரணங் களுக்குச் சூரியகிரணத் தொகுதிகளும் உவமை.

## தம்பியின் தேகத்தைக் கண்டு சோகங் கூர்தல்

[சேனை நடுவே சேனாவீரரெல்லாரினும் உயர்ந்தோனாக இந்திரசித்து நின்ற தோற்றம், பூமிமுழுதும் கவர்ந்து மூடிய பிரளயப் பெருங்கடல்மத்தியில் மகாமேரு நிற்கும் காட்சி போன்றது. அவன் சேனையுடன் அனுமான் நின்ற இடத்துக்குச் செல்வானானான். செல்லும்போது, யுத்தகளத்தை நோக்கி, அது,



பிணக்குவியல்களான மலைகளையும் இரத்தவெள்ளமான ஆறு கடல்களையும் ஆயுதக்கூட்டமான காட்டையும் பெற்று வேறோருலகம்போல விளங்கியதென்றெண்ணி வியப்புற்றான். எண் ணிறந்த வீரர் இறந்து கிடக்கின்றார்கள். இவர்க ளெல்லாரையுங் கொன்ற குரங்கு, ஒன்றே! 'எப்படை கொண்டு வெல்வ திராமன்வந் தெதிர்க்கின்!' என்றான். 'கண்ணனார் உயிரே அன்னார் கைப்படைக் கலத்திற்*காப்பார்' ஆக இருந்த வரம்பற்ற வீரர் மாண்டுகிடப்பதைக் கண்டு, புண்ணுள்ளே கோல்கொண்டு குத்தினாற்போல, மானத்தினால் வருந்தி மனம்புழுங்கினான். 'என் அத்தை சூர்ப்ப நகைக்கு உற்ற அங்கபங்கமும் என் சிறியதந்தை கரனுக்கும்† தம்பி அட்சனுக்கும் நேர்ந்த மரணமும் மற்றைய வரம்பற்ற அரக்கர் வதமும் மானுடர் இருவராலும் வானரம் ஒன்றினாலும் ஏற்பட்டிருக்கின்றனவென்றால், என் வீரம் மிக நன்றாயிருக்கிறது!' என்றெண்ணினான். இவ்வாறு எண்ணிக் கோபம் கூர்ந்து செல்வோன், தேய்ப்புண்ட தம்பியின் தேகத்தைக் கையினின்று வில்லும் கண்ணினின்று நீரும் சோரக் கண்டான். கண்டவன், 'என் ஐயா! உன் தந்தையின் சௌரியத்துக்கு அஞ்சி எமன் உன் உயிர்கவர அஞ்சுவானே! எமலோகத்தோரன்றி எவ்வுலகத்தோரும் உன்னை மறைத்துவைக்க மனந்துணியாரே! அப்படியாக, நீ எவ்வுலகத்திலே இருக்கின்றாய்!' என்று புலம்பிச் சகோதரசோகத் தைத் தாங்கமாட்டாதவனானான். அப்போது, அந்தச் சோகம், ஆணியால் அடிக்கப்பட்ட ஆணி ஆழ்ந்து உள்ளடங்குதல்போல, தம்பியைக் கொன்றவனைக் கொல்ல எழுந்த கோபத்தால் தாக்குண்டு உள்ளடங்கியது.

* கைப் படைக்கலத்தின்—கையிலுள்ள ஆயுதம்போல.

† இராவணன் தாய் கேகசியின் தங்கை கும்பீநசிக்கும் அவன் தந்தை விச்சிரவமுனிவனுக்கும் பிறந்தவன் கரன்.

### இந்திரசித்தைக் கண்ட அனுமான் எண்ணங்கள்

அனுமான், எதிரே வந்த இந்திரசித்தைப் பார்த்து, 'யான் எண்ணிறந்த இராக்கதரை எமலோகத்துக்கு அனுப்பியது, இவனை இங்கே இட்டுவந்திருக்கிறது. இவன் இந்திரசித்தே. யான் இதுவரை போராடியது, போராட்டன்று; விளையாட்டே: இவனோடு பொருதலே போராம்: இதுவரை வெற்றியைப் பற்றிய சந்தேகம் இல்லாதிருந்தது, இப்போது உண்டாயிருக்கிறது. இவனை வெல்வது, இராவணனையும் வெல்வதாம்' என்றெண்ணினான்.

### போர்

அப்போது, இராட்சசசேனை போர்தொடங்க, அனுமான், ஒரு மராமரத்தை எடுத்துக்கொண்டான். அரக்கர் அனுமான் மேல் எய்த அம்புகள், பழுக்கக்காய்ச்சிய இரும்பு, பட்டடையைச் சுடாததுபோல, அவனை ஊறுசெய்யவில்லை. இந்திரசித்து, அனுமானால் படைமுழுவதும் அழிவுறுவதைப் பார்த்து, இவனுக்குச் சமீபமாக வந்து, வில்லின் நாணியை விரலினால் தெறித்து மிகுந்த ஒலியையுண்டாக்கினான். அவ் வொலிக்குக் காரணமான அந்த நாணியானது அதிர்ச்சியால் அற்றுப்போம்படி இவன் தோள்கொட்டி எதிரொலி எழுப்பினான். அவன், இவன் தலையிலும் மார்பிலும் தைக்கும்படி பலபல பாணங்களைத் தொடுத்தான். இவன் தனது, மிகப்பெரிய இயற்கைவடிவத்தை எடுத்தான். அவன், அவ்வடிவை முடியக் காணமுடியாது, ஒரு பாகத்தையே பார்த்துப் பிரமித்துக்கொண்டிருக்கும்போது, இவன், தன்மேல் எய்யப்பட்ட அம்புகள் திரும்பி எய்த அவன் மேலேயே போய்விழும்படி வீசியெறிந்துவிட்டு, அவன் தேரையும் பாகனையும் குதிரைகளையும் அறைந்து அழித்தான். அவன், வேறோர் தேரேறி, இவன் மேனிமுழுதும் மறைய, அம்புமாரி பொழிந்தான். இவன் அந்தத் தேர்மேற் பாய்ந்து, அவன் வில்லைப்



பறித்து முறித்தான். அந்த வில் முறிந்த ஓசை அடங்குமுன், அவன் வேறொரு வில்லை யெடுத்துப் பல பாணங்களைத் தொடுக்க, இவன் சற்றே அயர்ந்தான். அயர்ச்சி அகன்றவுடன், மேருவென்று கூறும்படியான தாரு* ஒன்றைப் பிடுங்கிச் சுழற்றி, அவன் விடுத்த கணைகளனைத்தையும் முறித்து அவன் தலைமேல் அறைந்தான். மலையினின்றும் அருவிநீர் வடிதல்போலத் தலையினின்று இரத்த நீர்வழிய, அவன் சோர்ந்தான். சோர்வு தீர்வுறவே, சோனாமாரியாக வாளிமாரி பொழிந்தான். இவன் அவனைத் தேரோடு மேலே எறிந்தான். அவன் நெடுந்தூரம் மேலே சென்று திரும்பிக் கீழே விழுந்தான். விழுந்தவுடனே, எழுந்து விரைந்து விண்மிசை ஏகினான். அப்போது, இவன், அவன் சேமத்தேர்களையெல்லாம் சிதைத்தான்.

### பிரமாத்திரத்தால் அனுமான் கட்டுணல்

அவன், ஏறத் தேருமில்லாமல், எதிர்க்க வலியுமில்லாமல், யாது செய்வதென்று நினைந்து, இதுவே தக்கதென்று துணிந்து பிரமாத்திரத்தைப் பிரயோகம் பண்ணினான். அது, பெரும்பாம்பு வடிவுகொண்டு, இவனைக் கயிறுபோல இறுகக் கட்டியது. இவன், தளர்ந்து சாய்ந்தான். அப்போது, உயிர்தப்ப ஒதுங்கிப் பதுங்கி ஒளிந்திருந்த இராக்கதர், ஓடிவந்து சூழ்ந்து, இவனைச் சுற்றியிருந்த நாகத்தைப் பற்றி யிழுத்தார்கள்.]

### கட்டுண்ட அனுமானது நிலைமையின் வருணனை

125. குரக்கு நல்வலம் குறைந்ததென் றுவலங் கொட்டி
இரைக்கும் மாநகர் எறிகட லொத்ததெம் மருங்கும்
திரைக்கும் மாசுணம் வாசுகி ஒத்தது: தேவர்
அரக்கர் ஒத்தனர்: மந்தரம் ஒத்தனன் அனுமான்.

---

* தாரு - மரம்,

இ-ள். குரங்கினது மிகுந்த பலம் குறைந்ததென எண்ணி (க்களிப்புற்று வெற்றிக்குறியாக) ஆர்த்து வாய்கொட்டி-(இராக்கதர்) ஆரவாரஞ் செய்யப்பெற்ற இலங்கைமாநகரம்' அலையடித்து ஒலிக்கின்ற பாற்கடல் ஒத்தது. (அநுமானது உடலின்) எல்லாப் பக்கங்களையும் (சுற்றித்) தன்னுள் அடக்கிய (பிரமாத்திரமாகிய) பெரும் பாம்பு (அமுதம் உண்டாகப் பாற்கடலைக் கடைந்த காலத்திற் கடைகயிறாக மந்தரமத்தைச் சுற்றிய) வாசுகிப்பாம்பு போன்றது. (இலங்கையைக் கலங்கச் செய்த) அநுமான், (பாற்கடலை மறுகச்செய்த) மந்தரமலையை ஒத்தான்.

ஆவலங்கொட்டல் - ஏககாலத்தில் ஒலித்துக்கொண்டும் கையால் வாயில் அடித்துக்கொண்டும் ஒருவகை ஓசை உண்டாக்கல். இரைத்தல் - ஆரவாரித்தல். எறிதல் - (அலை) அடித்தல். அலையடித்தலால் ஓசையுண்டாக்கல் குறிப்பு. திரைத்தல் - தன்னுள் அடக்கல். மாசுணம்-பெரும்பாம்பு. வாசுகி, அஷ்டமாநாகங்களுள் ஒன்று; அமுதமதனகாலத்திற் கடைகயிறாக உபயோகிக்கப் பட்டது.

கட்டுண்ட அனுமானைக் கண்ட இலங்கைவாசிகளின் எக்களிப்பு

[ இந்திரசித்து அநுமானைக் கட்டிவரக் கண்ட ஆண்பாலார் பெண்பாலார் பிள்ளைகள் பெரியோரான எல்லா இலங்கைவாசிகளும் எக்களித்த எக்களிப்புக்கு மிக்க களிப்பில்லை. அவர்கள் அடைந்த அத்தியந்த சந்தோஷம், இந்திரன் கட்டுண்டநாளில் அவர்கள் அடைந்ததை ஒத்தது.]

பாசப்படலம் முற்றியது.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

ஸ்ரீ:

# நியாயப்பிரவேச மணிமேகலை.

[உகூசு—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

முன்பு வைதர்மியதிருஷ்டாந்தாபாசத்துள் பொருள்பற்றிய குற்றங்களடியாகவந்த சாத்தியாவ்யாவிருத்தம், சாதநாவ்யாவிருத்தம், உபயாவ்யாவிருத்தம் என்னும் திருஷ்டாந்தாபாசங்கள் நிரூபிக்கப்பட்டன.

இனி வைதர்மியதிருஷ்டாந்தவாக்கியங்களைக் கூறவேண்டிய முறைதவறக்கூறுதலாலாகிய சொற்பற்றிய குற்றங்களடியாகவரும் திருஷ்டாந்தாபாசநிரூபணம் செய்யத்தொடங்கி முதலில் அவ்யதிரேகம் என்னும் திருஷ்டாந்தாபாசநிரூபணம் பண்ணப்படுகிறது.

### 4. அவ்யதிரேகம்.

இது, நியாயப்பிரவேசத்தில் வருமாறு:—

I. அவ்யதிரேகோ யத்ர விநா ஸாத்ய
ஸாதநநிவ்ருத்யா தத்விபக்ஷபாவோ
நிர்திச்யதே। (௧௧)

II. யதா கடே மூர்த்தத்வமநித்யத்வஞ்ச த்ருஷ்டமிதி॥

இதன் பொருள்: I. அவ்யதிரேகமாவது எந்த அநுமானத்துள், சாத்தியசாதநதர்மங்களின் அபாவத்தைக் காட்டும் வியதிரேகவ்யாப்திவாசகமில்லாமலே அவ்வநுமானத்தின் விபக்க (திருஷ்டாந்த) ப்பொருள் காட்டப்படுகிறதோ (அது).

[ இவ்வளவும் இலக்கணவாக்கியம்; இனி வருவது உதாரண வாக்கியம்.]

II. எங்ஙனமெனில், குடத்தின்கண் மூர்த்தத்தன்மையும் அநித்தத்தன்மையும் காணப்பட்டது என்பதாம்.

இதனுள்ளும் பக்ஷ சாத்திய சாதந தர்ம வசநங்கள் சொல்லப் படவில்லை; அவை சத்தம் நித்தம் அமூர்த்தமாதலால் என்னும் பொருளுள்ள சொற்களாயிருக்கவேண்டுமென்று உதாரணத்தால் அறியக் கிடக்கிறது.

மணிமேகலையில் இவ்வாறன்றி நல்லநுமானத்துக்குரிய வியதி ரேகவ்யாப்திவாசகமிருக்கவேண்டியமுறையையும் காட்டி, அவ்வா றில்லாதிருக்கும் அவ்யதிரேகதிருஷ்டாந்தாபாசத்தின் உதாரணத் துக்குரிய பக்ஷ சாத்திய சாதந தர்மங்களையும் சொல்லி, உதாரணங் காட்டி விளக்கப்படுகிறது. அது வருமாறு:—

'அவ்வேதி ரேக மாவது சாத்திய
மில்லா விடத்துச் சாதந மின்மை
சொல்லாதே விடுத லாகுஞ் சத்த
நித்தம் பண்ணப் படாமையா லென்றால்
யாதொன்றி யாதொன்று நித்த மன்று
பண்ணப் படுவ தல்லா ததுவு
மன்றெனு மிவ்வெதி ரேகந் தெரியச்
சொல்லாது குடத்தின் கண்ணே பண்ணப்
படுதலு மநித்தமுங் கண்டே மாதலா
னென்னின் வெதிரே கந்தெரி யாது' (சருக—சகூ0)

என்பது.

இதனுள், "அவ்வெதிரேகமாவது சாத்தியமில்லாவிடத்துச் சாதநமின்மை சொல்லாதே விடுதலாகும்" என்பது இலக்கணம்.

இதன்பொருள்: 'அவ்வேதிரேகம்' என்னும் வைதர்மியதிருஷ் டாந்தப்போலியின் இலக்கணமாவது: அவ் வைதர்மியதிருஷ்டாந்த வாசகத்திற் சொல்லக்கடவதாயுள்ள, சாத்தியதர்மமில்லாத விடத்துச் சாதநதர்மமும் இல்லை என்பதைத் தெரிவிக்கும் வியதி ரேகவ்யாப்திவாசகத்தைச் சொல்லாமலே விட்டுவிட்டுத் திருஷ் டாந்தவசனத்தைமட்டும் சொல்லுதல் என்றவாறு.

இனி இதற்கு உதாரணங்காட்டி விளக்கவேண்டி அதற்குரிய சாதநவாக்கியம் காட்டப்படுகிறது '"சத்தம் நித்தம், பண்ணப் படாமையால்" என்றால்' என்று.

இதனுள், 'சத்தம் நித்தம் பண்ணப்படாமையால்' என்பது சாதநவாக்கியம். 'என்றால்' என்றது அதனை அநுவதித்தவாறு.



இதன்பொருள்: சத்தத்தைத் துணிபொருளுக்கிடமான பக்கப்பொருளாகக்கொண்டு அதனை, நித்தப்பொருளெனத் துணியக்கருதி, 'சத்தம் நித்தியப்பொருள்' எனப் பிரிதிஜ்ஞா வாசகம் கூறி, அதற்கு, 'பண்ணப்படுதலால்' என்று ஏதுவசனம் கூறுமிடத்தில் என்றவாறு.

[நியாயப்பிரவேசத்தில் இதன் ஏதுவசனம், அமூர்த்தமாதலால் என்று சொல்லப்பட்டிருக்கிறது.]

இனி, வியதிரேகவ்யாப்திவாசகங்காட்டியே, அஃதில்லாத அவ்யதிரேகம் காட்டுதல் விளங்குமாதலால், அந்த வியதிரேக வ்யாப்திவாசகத்தை அநுகரித்துக்காட்டியொழித்துவிட்டு, மேல் உதாரணம் காட்டி விளக்கப்படுகிறது,

"யாதொன்றி யாதொன்று நித்த மன்று
பண்ணப் படுவ தல்லா ததுவு
மன்றெனு மிவ்வெதி ரேகந் தெரியச்
சொல்லாது குடத்தின் கண்ணே பண்ணப்
படுதலு மநித்தமுங் கண்டே மாதலா
னென்னின் வெதிரே கந்தெரி யாது" (சருரு—சகூ0)

என்று.

இதனுள், 'யாதொன்றி யாதொன்று நித்தமன்று பண்ணப் படுவதல்லாததுவுமன்று' என்றது வியதிரேகவ்யாப்திவசனம்.

இங்கு எடுத்துக்கொண்ட 'சத்தம் நித்தம்' என்ற பிரதிஜ்ஞை யில், நித்தமாதல் சாத்தியதர்மமும், பண்ணப்படாமை சாதநதர்மமு மாதலால் அவற்றின் மறுதலை நித்தமல்லாமையும், பண்ணப் படாமையல்லாமையுமாம்; அதாவது அநித்தமாதலும், பண்ணப் படுதலும் என்றபடி.

பண்ணப்படுதல், 'பண்ணப்படுவதல்லாததுவுமன்று' என்று இரண்டெதிர்மறையாலுணர்த்தப்பட்டதொரு உடன்பாடாயிற்று.

யாதொன்று யாதொன்று நித்தமன்று (அநித்தம்), அது அது பண்ணப்படாததன்று (பண்ணப்படுவது); என்று சுட்டடுக்கு வருவித்துரைத்துக்கொள்க.

'எனும்' என்றது வைதர்மியதிருஷ்டாந்தத்துக்குரிய சாத்திய தர்மத்தின் இன்மையைப் பற்றி, சாதநதர்மத்தின் இன்மையைக் காட்டும் வியதிரேகவாசகத்தின் அநுகாரக்குறிப்பாய்நின்றது.

'இவ்வெதிரேகந் தெரியச்சொல்லாது' என்றது, அநுகரித்துக் காட்டப்பட்ட வியதிரேகவ்யாப்திவசனத்தைக் குறிப்பாற் கொள்ளச்செய்யாது கூற்றால் தெளிவுபெறக்காட்டுதல் நல்ல திருஷ்டாந்தவுறுப்பிற்குக் குணமாகும்; அங்ஙனங் கூறாதுவிடுதல் குற்றமாம் என்பதுபடநின்றது.

'குடத்தின்கண்ணே பண்ணப்படுதலும் அநித்தமும் கண்டேம்' என்றது உதாரணம்.

இதன் பொருள்: குடத்தினிடத்தில் சாத்தியதர்மாபாவமான அநித்தமாதலும், சாதநதர்மாபாவமான பண்ணப்படுதலும் கண்டோம் என்றவாறு. அதாவது பண்ணப்படுதலும் அநித்தமாதலுமுள்ள குடம்போலும் என்றபடி. இது குடம்போலும் என்று கூறற்பாலதாகிய திருஷ்டாந்தவசனத்தின் பரியாயமாயிற்று.

'அநித்தம்' என்றது முதலாகுபெயராய் அநித்தமாதலை யுணர்த்திநின்றது.

'ஆதலால்' என்றது, 'சத்தம் நித்தம்' என்னும் பக்கவசனங் கொண்டு முடிவுபெறநின்றது.

'என்னில்' என்றது, இவ்வாறு திருஷ்டாந்தவானம் ஒருவன் கூறுவானாகில் என்றவாறு.

'வெதிரேகம் தெரியாது' என்றது வைதர்மியதிருஷ்டாந்தத்துக்குரிய வியதிரேகவ்யாப்தியுணர்வு தெளிவுபெறத்தோன்றாதென்றவாறு. வியதிரேகவ்யாப்தியுணர்வு தெளிவுபெறத்தோன்றாதவழி அநுமிதியுணர்வும் தோன்றாதாதலால் இது திருஷ்டாந்தப் போலியாம் என்பது குறிப்பு.

வியதிரேகவ்யாப்திவாசகம் கூறியவழி இது திருஷ்டாந்தப் போலியாகமாட்டாதென்பது கருத்தாயிற்று.



## 5. விபரீதவ்யதிரேகம்.

இனி, நியாயப்பிரவேசத்தில், விபரீதவ்யதிரேகம் என்னும் வைதர்மியதிருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:—

விபரீதவ்யதிரேகோ யதா ।
யதநித்யம் தந்மூர்த்தம் த்ருஷ்டமிதி வக்தவ்யே
யந்மூர்த்தம் ததநித்யம் த்ருஷ்டமிதி ப்ரவீதி ॥

இதன்பொருள்: விபரீதவ்யதிரேகம் எங்ஙனமெனின்? 'எது அநித்தியப்பொருளோ அது மூர்த்தப்பொருளாகக் காணப்பட்டது' என்று சொல்லவேண்டுமிடத்தில், 'எது மூர்த்தப்பொருளோ அது அநித்தியப்பொருளாகக் காணப்பட்டது' என்று சொல்லுகிறது (சொல்லுதல்) என்பதாம்.

இதன்கண்ணும் சாதநவாக்கியங்கள் சொல்லாமலே திருஷ்டாந்தவசனம் மட்டும் காட்டப்பட்டிருக்கிறது.

[இங்கும் 'சொல்லுதல்' என்னும் பெயரின் பரியாயமாக, சொல்லுகிறது என்னும் பொருளுள்ள 'ப்ரவீதி' என்னும் வினைச் சொல்லைத் தமிழ்நாட்டுவழக்கின் மொழிபெயர்ப்பாய் வழங்கிய இந் நூலாசிரியர், வடமொழி தென்மொழி யிலக்கணங்கல்லாத தமிழரா யிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.]

இனி, இவ்வைதர்மியதிருஷ்டாந்தப்போலிநிரூபணம் மணிமேகலையில் வருமாறு:—

'விபரீ தவெதி ரேக மாவது
பிரிவைத் தலைதடு மாறாச் சொல்லுதல்
சத்த நித்த மூர்த்த மாதலின்
என்றா லென்று நின்ற விடத்து
யாதோ ரிடத்து நித்தமு மில்லையவ்
விடத்து மூர்த்தமு மில்லை யெனாதே
யாதோ ரிடத்து மூர்த்தமு மில்லையவ்
விடத்து நித்தமு மில்லை யென்றால்
வெதிரேக மாறு கொள்ளுமெனக் கொள்க' (சசுக—சுகூ)

என்பது.

இதனுள், 'விபரீதவெதிரேகமாவது: பிரிவைத் தலைதடுமாறாகச்சொல்லுதல்' என்றது இலக்கணம்.

இதன்பொருள்:—விபரீதவ்யதிரேகம் என்னும் வைதர்மிய திருஷ்டாந்தப்போலியின் இலக்கணமாவது: வியதிரேகவ்யாப்தி வாசகத்தில் சாத்தியசாதநதர்மாபாவவசனங்களை முறையே கூறாது சாத்தியதர்மாபாவவசனத்தை சாதநதர்மாபாவவசனத்தின் பின்னும் சாதநதர்மாபாவவசனத்தை சாத்தியதர்மாபாவவசனத்தின் முன்னுமாக மாறிநிற்கக்கூறுதல், என்றவாறு.

'விபரீதவெதிரேகம்' என்னும் இலக்கியத்தின் பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் ஆகுபெயர்.

'பிரிவு' என்றது ஈண்டு சாத்தியசாதநதர்மங்களின் நீக்கத்தை; அந்நீக்கம் அவற்றின் அபாவமாதலால், சாத்தியசாதநதர்மாபாவங்களைத்தலைதடுமாறாகச்சொல்லுதல்எனப்பொருளுரைக்கப்பட்டது.

தலைதடுமாற்றம் - இடம் தடுமாறிநிற்றல்; தலை - இடம். தடுமாற்றம் - இது, தட்டுமாற்றம் என்னும் வழக்கின் திரிபாயுள்ளது. தட்டுமாற்றமாவது: தராசுநிறையில்விட்டநீட்டத்தால் நிறைவேறுபடாமைப்பொருட்டு, நிறையெண்ணிக்கையின் இடையேபடியிருந்த தட்டில் பண்டத்தையும் பண்டமிருந்ததட்டில் படியையும் மாற்றிவைத்துக் குறையெண்முடியநிறுத்தல். இவ்வுவமைகொண்டு பொருள் விரித்துரைக்கப்பட்டது.

இனி உதாரணங்காட்டி விளக்கவேண்டி அதற்கு இன்றியமையாத சாதநவாக்கியங் கூறப்படுகிறது, 'சத்தநித்த மூர்த்தமாதலின் என்றால்' என்று.

இதன்பொருள்: சத்தத்தைப் பக்கப்பொருளாகக்கொண்டு, அதன்கண் நித்தத்தன்மை துணியவேண்டிச் 'சத்தம் நித்தம்' எனப் பிரதிஜ்ஞாவாசகம் கூறி, அதனை நிரூபிப்பான் 'மூர்த்தமாதலால்' என்று ஏதுவாசகம் கூறுவானாகில் என்றவாறு.



இதனுள், 'மூர்த்தமாதலால்' என்னுமளவும் வாதிகூற்றாகிய சாதநவாக்கியம்; 'என்றால்' என்றது அதனை எதிரி வாதிக்கு அநுவதித்துக்காட்டியவாறு; 'என்று நின்றவிடத்து' என்றது பக்ஷ சாத்தியசாதநதர்மங்கள் இவ்வாறு நின்றவிஷயத்தில் என்றவாறு. இது குற்றத்தைவிளக்குதற்பொருட்டுப் புனரநுவாதம்செய்து கொண்டபடி.

"யாதோரிடத்து நித்தமுமில்லை அவ்விடத்து மூர்த்தமுமில்லை என்னாதே" என்றது வைதர்மியதிருஷ்டாந்தங் காட்டுமிடத்திற் சொல்லுதற்குரிய வியதிரேகவ்யாப்திவசனத்தில் சாத்தியதர்மாபாவவசனம் முன்னும், சாதநதர்மாபாவவசனம் பின்னுமாகச் சொல்லுவதே முறை என்பதை எடுத்துக்காட்டி, இவ்வாறுசொல்லாமலே மாறிச்சொல்வது குற்றம் என்பதுதோன்றக் குணத்தை இணைத்துக்காட்டியவாறு.

இதனுள், 'யாதோரிடத்து' என்றது யாதொருபொருளில் என்றபடி.

'நித்தமுமில்லை' என்றது நித்தத்தன்மையுமில்லை என்றவாறு.

'அவ்விடத்து' என்றது அப்பொருளில் என்றவாறு.

மூர்த்தமுமில்லை என்றது மூர்த்தத்தன்மையுமில்லை என்றவாறு.

நித்தமுமில்லை என்னும் உம்மை எதிரதுதழீஇயிற்று.

மூர்த்தமுமில்லை என்னும் உம்மை யிறந்ததுதழீஇயிற்று.

'என்னாதே' என்றது, என்றால் இத்திட்டாந்தம் நல்லதேயாம்; போலியாகிப் பிழைபடமாட்டாதென்றபடி.

'யாதோரிடத்து மூர்த்தமுமில்லை, அவ்விடத்து நித்தமுமில்லை' என்றது விபரீதவ்யதிரேகத்துக்கு உதாரணம் காட்டியவாறு. இதன்பொருள்: எவ்வெப்பொருளில் மூர்த்தத்தன்மையில்லையோ அவ்வப்பொருளில் நித்தத்தன்மையுமில்லை என்பதாம். இது

வியாப்திவாசகப்போலியாகையால் வினவும் சுட்டும் அடுக்குப் பொருள்படநின்றன. மூர்த்தம் நித்தம் என்பன முதலாகுபெயராய் அதனதன் தன்மையுணரநின்றன. உம்மைகளிரண்டும் முறையே எதிரதும், இறந்ததும் தழுவிநின்றன.

'என்றால்' என்றது உதாரணத்துள்ள குற்றங்காட்டுதற்கு அவ்வுதாரணத்தை அநுவதித்துக்கொண்டமைதோன்றநின்றது.

'வெதிரேகம் மாறுகொள்ளும் எனக் கொள்க' என்றது சாத்தியசாதநதர்மாபாவங்கள் தலைதடுமாறித் தோன்றுதல்பற்றி வியதிரேகவ்யாப்தியுணர்வைக் கெடுத்தலால் இது திருஷ்டாந்தப் போலியாம் எனக் கொள்ளக்கடவாய் என்றவாறு.

இதனுள், 'வெதிரேகம்' என்றது அபாவவாசகமாய் சாத்திய சாதநதர்மாபாவங்களையுணர்த்திநின்றது.

மாறுகொள்ளுதல் - அவ்வபாவவுணர்வு முன்னிற்கக்கடவது பின்னும், பின்னிற்கக்கடவது முன்னுமாக மாறிநிற்குமாதலால் வியதிரேகவ்யாப்தியுணர்வு தோன்றுதொழியும் என்பதாம். 'கொள்க' என்னும் வியங்கோள் ஈண்டு விதிப்பொருளுணரநின்றது.

இத்திருஷ்டாந்தப்போலிநிரூபணத்தில் திருஷ்டாந்தப் பொருள் இன்னதெனக் காட்டப்படாமையால், அது யாதாயினும் ஆகுக; வியதிரேகம் மாறுகொள்ளுமாறுகூறும் வியாப்திவாசகம் பற்றியே இது திருஷ்டாந்தப்போலியாமென்பது குறிப்பாயிற்று.

இங்ஙனம் திருஷ்டாந்தப்போலிவகை யுரைக்கப்பட்டன.

இங்ஙனம் நியாயப்பிரவேசத்துக்கும் மணிமேகலைக்கு முள்ள ஒற்றுமை வேற்றுமையாராய்ச்சி ஒருவாறு முடிந்தது.

இனி இவை தம்முள் வேறுபட்டபகுதிகளும் ஆராயப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

# இரண்டாம் இராஜாதிராஜன்.

[இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரைத் திரு. சோமசுந்தரதேசிகர் எழுதியது.]

விஜயாலயன்முதலாகச் சோழநாட்டைத் தலைநகராகக் கொண்டு பிற்காலத்தில் ஆண்ட சோழர்களிலே இராஜாதிராஜன் என்ற பட்டந்தாங்கி ஆண்ட சோழ அரசர் இருவராவர். அவர்களுள்ளே ஒருவன் கங்கைகொண்டசோழனான இராஜேந்திரசோழதேவனுடைய மகனாவான். அவனை முதல் இராஜாதிராஜன் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர். மற்றொருவன் இரண்டாம் இராஜராஜனுக்குப்பின் அரசுகட்டிலேறியவன். அவனை இரண்டாம் இராஜாதிராஜன் என்று சரித்திரக்காரர் கூறுவர்.

இரண்டாம் இராஜாதிராஜனுடைய சரிதத்தை எழுதுமுன் அவனுக்குமுன் அரசாண்டவர்களுடைய சரிதம் சுருக்கி வரையப்படும். 'ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச் சூடுங் குலோத்துங்க சோழனென்றே யென்னைச் சொல்லுவரே' என்று பாடிய குலோத்துங்கசோழன் II கி. பி. 1133-முதல் 1146-வரையில் ஏகசக்கிராதிபதியாய்த் தமிழ்நாடுமுழுவதையும் அரசாண்டுவந்தான். இவனே தில்லையம்பலத்திலிருந்து கோவிந்தராஜப்பெருமாளைப் பறித்தெடுத்துக் கடலிலெறிந்து வைணவர்களையும் துன்புறுத்தினன். இவன்மேல் உலா பிள்ளைத்தமிழ் முதலியன ஒட்டக்கூத்தர் பாடியுள்ளார். இந்தக் குலோத்துங்கனுக்குப்பின் இவனுடைய மகன் இராஜராஜன் 1146-ல் அரசுகட்டிலேறினன். இவனுடைய அரசாட்சி 1146-ஆம் ஆண்டு மேமீ 22-ஆம் தேதிக்கும் ஜூன்மீ 26-ஆம் தேதிக்கும் இடையில் ஆரம்பித்திருக்கவேண்டுமென்று சுவேல் ஆசிரியர் கூறுவர். ஒட்டக்கூத்தர் இவன்மேலும் உலா ஒன்று பாடியுள்ளார். இவனுடைய ஆட்சி தமிழ்நாட்டிலும் வடக்கே நெல்லூர்வரையிலும் பரவியிருந்தது. இவனுக்குப் பின்னர், சோழவரசனைக் சிங்காதனம் ஏறியவன் இரண்டாம் இராஜாதிராஜன் ஆவான். இவனைக் குறித்த சரிதச்செய்திகளே ஈண்டு வரையப்படுகின்றன.

இராஜராஜனுக்கு ஆண்மக்கள் இல்லாமையாலே கங்கைகொண்டசோழபுரத்திலே இருந்த இராஜராஜனுடைய பாட்டனை உடையார் விக்கிரமசோழதேவர்பேரனும் நெறியுடைப்பெருமாளுடையமகனுமான எதிரிலிப்பெருமாளைக்கொண்டுவந்து இராஜராஜனுடைய சம்மதத்தின்மேல் இளவரசனைகப் பட்டஞ்சூட்டினர். இந்தச்செய்தி தஞ்சைஜில்லா மாயூரம் தாலூகா, மாயூரத்திற்கு வடபால் இரண்டுகட்டை தொலையிற் பல்லவராயன்பேட்டை என்ற ஊரிலுள்ள கல்வெட்டால் இனிது பெறப்படும். அது வருமாறு:—

1 [1] ஸ்வஸ்திஸ்ரீ கடல்சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் கலைமாதரு, மடல்சூழ்ந்த போர்மாதருஞ் சீர்மாதரு மமர்ந்துவாழ

2 நாற்கடல்சூழ் புவியேழும் பாற்கடல்போல் புகழ்பரப்ப, ஆதியுகம் வந்தென்னச் சோதிமுடி புனைந்தருளி, அறுசமயமும்

3 ஐம்பூதமும் நெறியில்நின்று பாரிப்பத் [2]தேங்கவருஞ் சேரலருஞ் சிங்களரும் முதலாய, மன்னவர்கள் திறைசுமந்து வந்திறைஞ்சி சேவிப்ப, ஊழிசெங்கோல் எழுபாரு மினிதளிப்பச் செம்பொ[ன்][3] வீ

4 ரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரிபன்மரான திருபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவர்க்கு யாண்டு எட்டாவது ÷ ||| ☰

5 ஜயங்கொண்டசோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைக்குளத்தூர்க் குளத்துழான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியாரான பல்லவ

6 ராயர் [;] பெரியதேவர் ராஜராஜதேவர் பொத்து[4] கோயிற்கொத்தும் [5]ஆவர்க்குத் திறை அகம்படி நியாயம் உள்ளிட்ட துறைகளுக்கும் முதலிகளுமாய், முதலிகளோபாதி காரியத்

7 துக்குங் கடவருமாய் எல்லாவரிசைகளும் முன் ஏவல் உள்ளிட்ட முதலிகள் பெறக்கடவ ஏற்றங்களும் பெற்றுநின்று; பெரியதேவர் துஞ்சியருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமா

8 கையால் [1]ஆயிரத்தளிப்படைவீடும் விட்டுப் போதவேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்த[ப்]புரமும் [2][பண்ட]ாரங்களும் உள்ளிட்டன எல்லாம் பரிகரித்துக் [கூட்டி]க் கொடுபோந்து ராஜ

9 [ரா]ஜ புர[த்]திலே இருந்த இடத்துக்குச் சூழ்ந்த இடங்............ யாரு மிகுதிப்..............ரத்து உடன்கூட்டத்தா.................. ராலும் எல்லாக் கிலக்க.............சோழராஜ்யத்துக்கு.........யே இருப்பார்[;] காரணவருட................[3]

10 வேண்டிப் புரத்து எல்லா அடைவுகேடுகளும் வராத இடத்து இங்... .........[4]ளும் பரிகரித்து; இவ்.........[5] பெரியதேவர் எழுந்தருளி .........[6] நாளிலே திரு அபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகள் இன்றியே [7]......ருக்கி

---

[1] இது, கல்வெட்டுத்துறையாரால் 1924-ம் ஆண்டு 433-வது எண்ணுடையதாகப் பதிவுசெய்யப்பட்டுளது.

[2] தென்னவரும் என்று வாசிக்க.

[3] பகரவளைவுக்குள் காட்டியிருப்பவை கல்வெட்டிலில்லாததைப் பூர்த்திசெய்ய எழுதப்பட்டவையாகும்.

[4] இந்தச் சொல்லைப் பேர்த்து என்று வாசிப்பர் கல்வெட்டுத்துறையார். ஆயினும் கல்விற்காணப்படுவது ஈண்டுக் குறித்தபடியேயாம்.

[5] அவர்க்கு என வாசிக்க.

[1] ஆயிரத்தளிப்படைவீடு என்பது திருக்காட்டுப்பள்ளிக்கு அண்மையிலுள்ள நேமம் என்பர்.

[2] இந்த இடத்தில் மூன்று எழுத்துத் தெரியவில்லை. பண்ட என்றாவது பரிவ என்றாவது நிரப்பிக்கொள்ளலாம்.

[3] ஒன்பதாவதுவரி மிகுதியும் உடைக்கப்பட்டிருக்கிறது. அதனாலே இந்தக் கல்வெட்டினால் விளங்கவேண்டிய பலசெய்திகள் அறிய இயலாது தடைப்பட்டுவிட்டன.

[4] இந்த இடம் பூர்த்திசெய்யமுடியவில்லை. இங்கு எட்டெழுத்துக்கள் வேண்டியிருக்கின்றன.

[5] இவ் என்பதற்குமுன் ஆறு எழுத்துக்கள் சிதைந்துபோயின. அவற்றை விதமாகப் என்று பூர்த்திசெய்யலாம்.

[6] இந்த இடத்தில் நான்கு எழுத்துக்கள் இல்லை. கல்வெட்டுத்துறையார் யிருந்த என்று பூர்த்திசெய்கின்றனர்.

[7] இன்றியே என்பதன்முன் மூன்று எழுத்துக்கள் வேண்டியிருக்கின்றன. கஇரு என்ற எழுத்துக்கள் பொருத்தமானவை. அப்பொழுது பிள்ளைகள் இன்றியேக இருக்கிறபடியைப் பார்த்து' என்று வாசிக்கப் பொருள் விளக்கமாகும்.

11 றபடியைப்பார்த்து முன்னுளிலே காரியம் இருந்தபடி வி..........[1] செய்து கங்கைகொண்டசோழபுரத்திலே எழுந்தருளி இருக்கிற பிள்ளை களை......[2]யாணம் பண்ணுவித்து; உடையார் விக்கிரமசோழதேவர் போனர்

12 நெறிஉடைப்பெருமாள் திருமகனர் எதிரிலிப்பெருமாளை பெரியதேவர் துஞ்சியருளினநாளிலே மஞ்ஞடைகவிப்பித்து [இருக்]தாராரனவாறே இவரைத் திருஅபிஷேகம்பண்ணுவிக்கக் கடவாராக [;எடுத்]து நாலாந் திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ

13 ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து உடன்கூட்டமும் நாடும் மொன்று பட்டுச் செல்லும்படி பண்ணிவித்தருளினர்[;] மிகைசெய்யாதபடியும் பரிகரித்து இவர்கள் எல்[லோரு]ஞ் சேரப்பிடித்துப் பணி அழகிதா

14 கச் செய்வதொருபடியும் பண்ணி;[3]

இந்தக் கல்வெட்டால் இராஜராஜதேவர் இறக்கும்போது அவருக்கு ஆண்பிள்ளைகள் இல்லையென்பது திட்டமாகப் பெறப்படுதலோடு, கி. பி. 1118-முதல் 1133-வரையில் அரசாண்ட விக்கிரமசோழதேவருடைய பேரனும் நெறியுடைப்பெருமாளுடைய திருமகனுமான எதிரிலிப்பெருமாளை அரசனக்கினர்கள் என்பதும் பெறப்படும். நெறியுடைப்பெருமாள் என்பார் இரண்டாங்குலோத்துங்கனுடைய இளவலாகவிருக்கவேண்டும் என்று கருதுவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சரித்திர ஆசிரியராகவிருக்கும் திருவன் கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள்[4]. அதற்குக் காரணம் அவர்கள் கங்கைகொண்டசோழபுரத்தில் வாழ்ந்ததேயாம். அது கொண்டு விக்கிரமசோழதேவர்க்குப் பிள்ளைகள் இருவரென்றும், மூத்தவன் இரண்டாங்குலோத்துங்கனென்றும், இளையவன் நெறியுடைப்பெருமாள் என்றும் துணிதல் சரியன்று. ஆயினும், இவர் உடையார் விக்கிரமசோழதேவருடைய மகளின் கணவனாக (மருமகன் அல்லது மாப்பிள்ளையாக) இருத்தல் கூடும். அங்ஙனமிருந்தாற்றான் எதிரிலிப்பெருமாள் உடையார் விக்கிரமசோழதேவருடைய பேரனாகவிருத்தல் இயலும்.

இஃதன்றியும், மூவருலாக்களில் ஒன்றிலேனும் விக்கிரமசோழதேவருக்கு இரண்டுபிள்ளைகள் இருந்தனரென்று சொல்லப்படவில்லை. இதுவரையிற் கிடைத்துள்ள கல்வெட்டுக்களுள் ஒன்றிலேனும் இச்செய்தி குறிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆதலினாலே இங்குக் கூறியபடி எதிரிலிப்பெருமாளான ராஜாதிராஜதேவர் விக்கிரமசோழதேவருடைய மகள்வயிற்றுப் பேரனாக இருக்கவேண்டும்.

இவர்கள் உறவின்முறையைக்காட்ட இந்தப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டைத்தவிர்த்து வேறு ஏதாவது ஆதாரம் உண்டோ என ஆராய்வோமாயின் காஞ்சீபுரத்திலே காணப்படும் கல்வெட்டொன்று இராஜராஜனையும், இராஜாதிராஜனையும் சேர்த்துக் கூறுகின்றது. அது வருமாறு:—

1 [1]ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் கலைமாதரும்...
......[2] பார்மன்னர் வந்திறைஞ்சச் சொம்பொன் வீர ஸிம்ஹாஸ
நத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி
பன்மரான திரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவர்க்கு
யாண்டு [அ] ஆவது கார்த்திகைமாசத்து முதற்றியதிநாள் [;] உடை
யார்

2 ராஜராஜதேவர்க்கு யாண்டு [கூஆவது] தைமாசமுதல் [;]திரு
புவனச்சக்ரவத்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவர்க்குயாண்டுஅ-ஆவது

---

[1] வியின் முன் நான்கெழுத்து வேண்டும். கல்வெட்டுத்துறையார் 'விண்ணப்பஞ்' என்று பூர்த்திசெய்வர். அதில் ஓரெழுத்துக் கூடுகிறது. விசாரணை என்று எழுதினல் சரியாகவிருக்கும். பொருளும் நன்குவிளங்கும்.

[2] பிரயாணம் என்று வாசிக்க.

[3] இதற்குமேலுள்ள பகுதி முன்னர் உரியவிடத்துக் குறிக்கப்படும்.

[4] Journal of Indian History Vol XII, பக். 39-49 பார்க்க.



[1] S. I. I. தொகுதி. IV. No. 820.

[2] இடம் வீணே அடையுமென்றெண்ணி மெய்க்கீர்த்தி முழுவதும் கொடுக்கவில்லை.

[3] இது ஒன்பது என்றிருக்கவேண்டும். ஐப்பசிமாதம் முடிய எட்டானல் கார்த்திகை முதற்றெய்திநாள் ஒன்பது என்பது தானே பெறப்படும்.

ஐப்பசிமாஸம்வரை [;] யாண்டு பதினைஞ்சில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சீபுரத்து உடையார் திருவேகம்பமுடையார்க்கு செங்கெணி அம்மை அப்பன் சீயன் அம்மை அப்பனான [1] எதிரிலிசோழச் செம்புவ[2]

இந்தக் கல்வெட்டிலிருந்து இராஜராஜனுக்குப்பின் இராஜாதிராஜன் அரசுகட்டிலேறினானென்பது விளக்கமாவதோடு மற்றொரு முக்கிய செய்தியும் வெளிப்படுகிறது. இராஜராஜன் பட்டந்துறந்து இறந்தது ஒரு தைமாதம் என்பதும் அதற்கு முந்திய கார்த்திகை மாதத்திலேயே இராஜராஜனுக்குப்பிறகு எதிரிலிப்பெருமாள் அரசுரிமைபெற நியமிக்கப்பட்டுவிட்டார் என்பதுமேயாம். இல்லாவிடில் இராஜராஜன் தைமாதத்தில் சிவபெருமானது திருவடிநீழலடைய அதுமுதல் இராச்சியத்தில் அரசினில்லாது இருந்ததாக ஏற்படும். அதற்கு மாறாக, பல்லவராயன்பேட்டைக்கல்வெட்டில் எதிரிலிப்பெருமாளைப் பெரியதேவர் துஞ்சியருளினநாளிலே மண்டைகவிப்பித்து என்று காணப்படுவதுகொண்டு இராஜாதிராஜதேவர், பெரியதேவர் இறந்தவுடனேயே பட்டஞ்சூடினார் என்பதும் இராஜராஜனுடைய முழுச்சம்மதம்பெற்றே இளவரசனாகநின்றார் என்பதும் பெறப்படும். இப்பொழுது பல்லவராயன்பேட்டைக்கல்வெட்டில் 6-வது வரியிற் காணப்படும் பெரியதேவர் போத்துகோயிற்கோத்தும் என்பதும் பொருள்படும். இப்பொழுது காணப்படும் தொடருக்குப் பொருளில்லை. அதனைப் பொத்துக்[3] கோயிற்கோத்தும் என்றுகொண்டால் பொருள்விளங்கும். பொத்துதல் என்ற சொல் புதைத்தல் என்ற முதற்பொருளையுடையது. பொத்தலுக்கு நைந்துபோதல் என்பது வழக்குப்பொருளாகவிருக்கின்றது.

---

[1] செங்கேணி அம்மையப்பன் சீயன் அம்மையப்பனை என்று வாசிக்க.

[2] இந்தக் கல்வெட்டு இதற்குமேல் வெட்டப்படவில்லை.

[3] பொத்து என்பதைப் பேர்த்து என்று கல்வெட்டுத்துறையார் கொண்டதிற் பொருளில்லை. அதனைப் பெருந்து என்றுகொண்டால் வீங்கிக் கிடக்க என்று பொருள்கொள்ளலாம்.



அவன் பொத்துக்கிடக்கிறான் என்றால் அவன் மிகுதியும் நோய்வாய்ப்பட்டுக்கிடக்கிறான் என்ற பொருள் வழக்கிலுள்ளது. ஆதலினாலே ராஜராஜன் நோய்வாய்ப்பட்டு அரண்மனையிலே பாயும் படுக்கையுமாகவிருந்தான் என்பது பொருளாகும். அவ்வாறிருந்தபோதுதான் ராஜராஜனுக்கு நெருங்கிய உறவினனை திருச்சிற்றம்பலமுடையான் பெருமான்நம்பியை அழைத்துத் தனக்குப் பிந்தி அரசாட்சிக்கு ஒருவனைத் தெரிந்தெடுக்க உத்திரவிட்டான். அவனும் முந்தியிருக்கிறபடியைப்பார்த்து (வரி, 11) விசாரணைசெய்து எதிரிலிப்பெருமாளைத் தெரிந்தெடுத்தான். ஆகவே இராஜராஜனுக்குப்பின் இராஜாதிராஜன் அரசுகட்டிலேறினான் என்பது பெறப்பட்டது.

[தொடரும்.]

---

உ

# அழானும் புழானும்.

அழான் புழான் என இயற்பெயர்க்கண்ணும் அழாஅன் புழாஅன் என அளபெடைப்பெயர்க்கண்ணும் பயின்றுவரும் இவை எப்பொருள்குறித்தனவென்றல் சாலாது.

"அழான் புழான் என்பன: அக்காலத்து அவையுண்மையின் ஆசிரியரான் ஓதி முடிபுகூறப்பட்டன" என்று இளம்பூரணரும், "அழாஅன் புழாஅன் என்பன முற்காலத்து நடந்து இக்காலத்துக் கெட்டன" என்று நேமிநாதரும் கூறுதலின் இளம்பூரணர் முதலாகிய பலர்க்கும் அவை தத்தங்காலத்திலே வழக்காறற்றன என்பது தெளியப்படும்.

"அழான் புழான் முதலியனவும் எழுத்திற்புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்" எனச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் கூறுதலின் அவை வ்ழக்காறற்றனவும் பொருள் புலப்பாடற்றனவுமாம் என்பது விளங்கும்.

"ஆதனும் பூதனும்" (தொல். எழுத். புள்ளி. ருந.) என்னுஞ் சூத்திரவுரையிலே, "துவரவென்றதனுன் அழான் புழான் என நிறுத்திப் பொருந்தின செய்கைசெய்து அழாந்தை புழாந்தை என முடிக்க" என இளம்பூரணரும், "அழான் புழான் என நிறுத்தித் தந்தையென வருவித்து நிலைமொழியீறு னகரமும் வருமொழித் தகரமும் அகரமும் கெடுத்து அழாந்தை புழாந்தை என முடிக்க" என நச்சினார்க்கினியரும் கூறுதலானும், அவற்றை உயர்திணைப் பெயரும் உயர்திணை விரவுப்பெயருமாகி அளபெடுக்கும் ஆணீற்றளபெடைக்கு உதாரணங்களாக இளம்பூரணர் கூறுதலானும் அவை அப்பெயரினவாகவே கொள்ளப்படும்.

"எழுத்திற்புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்" என்ற நச்சினார்க்கினியரே "ஆதனும் பூதனும்" என்னுஞ் சூத்திரத்திலே வந்து "துவர" என்றதனுன் அவ்வொதுக்கியவற்றை உதாரணங்காட்டற் கெடுத்துக்கொண்டார் என்றல் சாலாமையின், நச்சினார்க்கினியத்திலே ஆங்குப் பயின்ற அழாந்தை புழாந்தை என்பன இடைச்செருகலெனக்கோடலே தெள்ளிதாகும்.

இதுகாறும் கூறியவற்ருனே, அழான் புழான் என்பன வழக்காறற்றன என்பதூஉம், அவற்றின் பொருளும் விளங்கப்பெற்றில என்பதூஉம், சேனுவரையர் ஒதுக்கியவாறே தாமும் ஒதுக்கிய நச்சினார்க்கினியர் "ஆதனும் பூதனும்" என்னுஞ் சூத்திரவுரையிலே அவற்றைத் தந்தையொடு கூட்டி அழாந்தை புழாந்தை என முடித்தாரென்றல்இடைச்செருகலாமென்பதூஉம் போந்தவாறறிக.

இங்ஙனம்,

க. சு. நவநீதகிருஷ்ணபாரதி.

தெல்லிப்பளை, இலங்கை.

---

உ

27

# ரமாமணி.

[உஎரு-ஆம்பக்கத் தொடர்ச்சி]

## நான்காம் அதிகாரம்.

### மணல்மேட்டின்மீது.

"..... ছবিছবে দেখিয়া অদূরে
ভীষণ দরশন মূরতি"

(வங்கபாஷையில் மேகநாதவத காவியம்)

[ஆச்சரியத்துடன் பார்க்கும்போது, சமீபத்தில் பயங்கரமான தோற்றத்துடன் ஓர் உருவம்.]

மணிராஜன் கண்விழித்தபோது இருண்ட ராத்திரியாயிருந்தது. கோரமான இவ்விடத்தில் தன்னைப் புலிகள் கொன்றுதின்னுதது, அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. இங்குமங்கும் பார்த்துப் புலிகள்வரவில்லையெனத் தெரிந்துகொண்டான். திடீரென்று எதிரே வெகுதூரத்தில் ஒரு வெளிச்சத்தைக் கண்டான். தனக்கு ஏற்பட்ட மயக்கத்தால், அது பிரமையாயிருக்குமோவெனச் சந்தேகித்துக் கவனத்துடன் அதை உற்றுப்பார்த்தான். அந்தப்பிரகாசம் மண்டலவடிவமாயிருந்ததுடன், அது அடிக்கடி வளர்வதையுங் கண்டான். அக்கினி மூட்டப்பட்டு எரிகிறதெனத் தெரிந்து, தான் இனி உயிர்வாழலாமெனத்தெளிந்தான். மனிதனுல் மூட்டப்படாமல் இந்த நெருப்புத் தானுக எரியாது. தானுகக் காட்டுத்தீ பற்றியெரிகிறகாலம், இதுவல்லவெனத் தெரிந்து, மணிராஜன் எழுந்துநின்றுன். அக்கினியெரிகிற தலத்தைநோக்கி விரைவாக ஓடினுன். ஒருகால் "கொள்ளிவாய்ப்பிசாசு" என்று சாமானிய ஜனங்களாற் சொல்லப்படுகிறதும், பௌதிகமாயிருப்பதுமான, நெருப்பாயிருக்குமோவெனச் சந்தேகித்தான். இவ்விதமே சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தால், தன்னைக்காத்துக்கொள்வது எங்ஙனம்? பயத்தைவிட்டு நெருப்பெரிகிற இடத்துக்கு ஓடினுன்.

மணல்மேடுகளும் செடிகொடிகளும் அவனுடைய கால்களின் வேகத்தைத் தடுத்தன. செடிகொடிகளை யறுத்துக்கொண்டும், மணல்மேடுகளைத் தாண்டிக்கொண்டும் விரைந்துசென்று அந்த இடத்தை நெருங்கினன். சமீபத்தில் சென்று பார்த்ததில் உன்னதமானதோர் மணற்குன்றின்மேல் அக்கினியெரிவதையும் அதனருகே ஆகாயமாகிற திரையில் வரையப்பட்ட சித்திரப்பதுமைபோல் வீற்றிருக்கிற ஒரு மனிதனையும் கண்டான். அவனிடம் நெருங்கிச்சென்று கடைசியாக அந்த மணற்குன்றின்மேல் ஏறினன். அங்கேபோய் அவனைப் பார்த்தவுடன் மணிராஜனுக்கு அச்சமுண்டாயிற்று. அங்கேயே நிற்பதா? அல்லது திரும்பிப் போய்விடுவதா? என்று அவனால் முடிவுசெய்யக்கூடவில்லை.

அம்மனிதன் கண்களை மூடிக்கொண்டு ஜபத்திலாழ்ந்திருந்தான். மணிராஜனை அவன் பார்க்கவில்லை. அம்மனிதனுக்கு ஏறக்குறைய வயது ஐம்பது இருக்குமென மணிராஜன் நிர்சயித்தான். அவன் இடுப்பில் பருத்திநூல்வஸ்திரம் உடுத்திருந்தானோவென, உறுதியாய்க் கூறமுடியவில்லை; அவனது இடுப்புமுதல் முழங்கால்வரை புலித்தோலால் மூடப்பட்டிருந்தது. அவனது கழுத்தில் ருத்திராக்ஷமாலை; நீண்ட முகமண்டலத்தில் தாடியும் மீசையும்; தலையிலோ ஜடை; இவைகளே அவனுக்கு அணிகளாக விளங்கின. அக்கினிக்குச் சமீபத்தில் மணிராஜன் உட்கார்ந்தபோது, நெருப்பிலிருந்து துர்நாற்றம் கிளம்புவதை உணர்ந்தான். அம்மனிதன் இரத்தத்தால் 'ஹோமம்' செய்வதையும், அவனைச்சுற்றி என்புத்துண்டுகள் சிதறிக்கிடப்பதையும், அவனது கழுத்திலிருக்கிற மாலையில், ருத்திராக்ஷங்களின் இடையிடை என்புத்துண்டுகள் கோத்திருப்பதையும் மணிராஜன் கண்டு மிகவும் வெறுப்படைந்தான். காபாலிகர்களைப்பற்றி, மணிராஜன் கேள்விப்பட்டிருந்ததால் அம்மனிதன் ஒருகாபாலிகனெனத் தீர்மானித்தான்.

மணிராஜன் அம்மனிதனை நெருங்கியபோது அம்மனிதன் ஜபத்திலாழ்ந்திருந்ததால், மணிராஜனைக் கவனிக்கவில்லை. சிறிது நேரங்கழித்து அம்மனிதன் தானகவே, (ஸம்ஸ்கிருதத்தில்) 'கஸ்த்வம்' [-நீயார்?] என வினவினன்.



மணிராஜன்: ப்ராஹ்மண:— [-நான் ஒரு பிராமணன்.]

காபாலிகன்: 'திஷ்ட'[-நில்.]

இவ்விதம் உரைத்துப் பின்னும் அவன் தன் காரியத்தையே கவனித்துக்கொண்டிருந்தான். அரையாமநேரம் கழிந்தது.

பிறகு காபாலிகன்:(மணிராஜனைநோக்கி, முன்போல் வடமொழியிலே உரைத்தான்.) 'மாமநுஸர' ['என்னைத் தொடர்ந்து வா.']

வெறுப்பையுண்டாக்கக்கூடிய அந்தக் காபாலிகனை, மணிராஜன் வேறுசமயத்தில் தொடர்ந்துபோயிருக்கவேமாட்டான். இப்பொழுதோ, பசியாலும் தாகத்தாலும் அவனுடைய உயிர் வெளியேறிவிடும்போலிருந்தது.

மணிராஜன் (காபாலிகனை நோக்கி) "பிரபுவின் ஆக்ஞையென்னவோ? நான் இப்போது பசியாலும் தாகத்தாலும், மிகவும் சிரமத்தை அடைந்திருக்கிறேன். எங்கே ஆகாரம் கிடைக்கும்? தயவுசெய்து தாங்கள் சொல்லவேண்டும்" என வணக்கமாக வினவினன்.

காபாலிகன்: "பைரவீப்ரேரிதோஸி. மாமநுஸர. பரிதோஷஸ்தே பவிஷ்யதி." [பைரவீதேவியால் ஏவப்பட்டிருக்கிறாய்; என்னைத் தொடர்ந்துவா; உனக்குச் சந்தோஷம் உண்டாகும்.]

பிறகு மணிராஜன் காபாலிகனைத் தொடர்ந்து சென்றான். போகும்போது இருவரும் ஒருவரோடொருவர் சம்பாஷிக்கவில்லை. இருவரும் சற்றுதூரம் சென்று, கடைசியில் ஒரு குடிசையை அணுகினார்கள். அக்குடிசையில் காபாலிகன் முதலில் நுழைந்து, பிறகு மணிராஜனை அதனுள் வரும்படி அநுமதித்தான். அவனுக்கு வெளிச்சம் தெரிவதற்காகக் காபாலிகன் ஒரு கட்டையைக் கொளுத்தி, உள்ளே காண்பித்தான். அவ்வெளிச்சத்தால், மணிராஜன் குடிசைக்குள் பார்த்ததில், உள்ளே வேறொரு வஸ்துவையும் காணவில்லை. ஓரிடத்தில் புலித்தோல்களும், மற்றோரிடத்தில் பழங்களும் கிழங்குகளும், பிறிதோரிடத்தில் மண்பாண்டம் நிறையத் தண்ணீரும் இருந்தன.

காபாலிகன் அக்கினியைமூட்டி மறுபடியும் சொன்னான்; "பழங்களையும் கிழங்குகளையும் உபயோகப்படுத்திக்கொள்வாயாக; குடத்திலுள்ள நீரைப் பருகி, விடாயைத் தீர்த்துக்கொள். இஷ்டமிருந்தால் புலித்தோல்களிற் படுத்துக்கொள்ளலாம். இங்கே புலிகளால் அச்சம் இல்லை. தடையின்றி நீ இங்கே இருக்கலாம். நான் மற்றொருசமயத்தில் உன்னைச் சந்திப்பேன். அதுவரை நீ இதை விட்டு வெளியேறக்கூடாது."

இவ்விதமுரைத்துக் காபாலிகன் வெளியேறினான். மணிராஜன் பழங்களையும் கிழங்குகளையும் தின்று கொஞ்சம் கடுப்பாயிருந்த நீரையும் பருகி மிகவும் களிப்படைந்தான். பிறகு புலித்தோலை விரித்துப் படுத்துக்கொண்டு, நாள் முழுவதும் பட்ட கஷ்டத்தினால் சீக்கிரமாகவே நித்திரையில் ஆழ்ந்தான்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

### சமுத்திரக்கரையில்.

—யொ ஹ்ரு ஹாவொ நவஜக்ஷ்யெ தெ ।
ஸிஹஷி வாகாஈதிஷி தா நாம
ஶ்ரூணாஷி நீஜெஹஃ—திவொவாஶாஹ ॥ (ரகுவம்சகாவ்யம்)

["உன்னிடம் யோகமகிமையிருப்பதாகவும் தெரியவில்லை. தாமரை, தங்கநிறத்தை அடைந்ததுபோல் பழுகற்றவர்களின் உருவத்தையும் நீ தாங்கியிருக்கிறாய்."]

காலையில் மணிராஜன் எழுந்திருந்து வெளியேறிப்போவதற்கு உபாயங்களை ஆலோசித்தான். காபாலிகனுடனிருந்தால் தனக்கு நன்மை கிடைக்காதென்று உறுதிகொண்டான். ஆனால் வழி தெரியாமல், இக்காட்டிலிருந்து எவ்விதம் வெளியேறுவது? வழிதெரிந்து எப்படி நம்மூர்போய்ச்சேர்வது? காபாலிகன் அவசியம் வழியறிந்திருப்பான். அவனை எங்ஙனம் வழியைப்பற்றி விசாரிப்பது? அவனைக் கேட்டால் ஒருக்கால் சொல்லமாட்டானா? இதுவரை அவன் என்னிடம் சந்தேகிக்கக்கூடியபடி நடக்கவில்லை. ஆனால் தான் குடிசைக்கு மறுபடியும் வரும்வரை வெளியேறக்



கூடாதென்று என்னைத் தடைசெய்திருக்கிறான். அவனாணையை நான் மீறினால், அவனுக்குக் கோபமுண்டாகும். அவனிடம் 'மந்திரசக்தி' அதிகமாக இருக்கிறது. அவன்வார்த்தையை மீறக்கூடாது. இவ்விதமாலோசித்துக் குடிசையிலே இருப்பதென்று மணிராஜன் தீர்மானித்தான்.

சாயங்காலநேரம்வரை காபாலிகன் திரும்பிவரவில்லை. முந்தினநாள் ஆகாரம் இல்லாததாலும், அன்றும் அதுவரை உணவில்லாததாலும் மணிராஜனுக்குப் பசி மிகவும் அதிகரித்தது. குடிசையிலிருந்த பழங்களையும் கிழங்குகளையும் முதல்நாளே தின்றாய்விட்டது. அப்பொழுதாவது வெளியேறிப்போய் ஆகாரம் தேடாவிடிற் பிராணன் போய்விடும்.

சிறிதுநேரம் கழித்து, உணவுதேடுவதற்காக அவன் வெளியேறினான். நான்குதிசைகளிலும் தேடியதில், ஒருசெடியில் முந்திரிப்பழம்போன்ற சுவையுள்ளவைகளான பழங்களைக் கண்டு, அவைகளால் தன் பசியை ஆற்றிக்கொண்டான்.

அங்கே மணல்மேடுகள் அதிகமாக இல்லாததால், மணிராஜன் அங்குமிங்கும் சுற்றித் திரிந்தான். பிறகு மணலில்லாத ஒருகாட்டில் நுழைந்தான். அங்கே வழியொன்றும் தெரியவில்லை. குடிசையெவ்விடத்திலிருக்கிறதென்றுகூட, அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. பெரிய அலைகளின் சத்தம் அவன்காதில் விழுந்தது. அது சமுத்திரத்தின் ஒலியென வுணர்ந்தான். காட்டைவிட்டு வெளியேறிச் சமுத்திரத்தை அவன் கண்ணாற் கண்டான்.

அநந்தமானதும், அபாரமானதுமான சமுத்திரத்தைக் கண்டவுடனே, அவனுக்கு ஆநந்தம் பொங்கிற்று. குறுமணல்நிறைந்ததான சமுத்திரக்கரையில் அவன் உட்கார்ந்தான். நுரைகள் நிறைந்ததும் நீலவர்ணமானதுமான அநந்தசாகரம்; இருபக்கங்களிலும் கண்களுக்கெட்டுகிறவரை அலைகளால் ஒதுக்கப்பெற்ற நுரையின் வரிசைகள்; நடுவில் செண்டாகக்கட்டப்பெற்றுப் புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலையைப்போல் நுரைகளின் வரிசையானது, தங்கநிறமுள்ள மணலில் பொதியப்பெற்றிருந்தது. பலமான காற்றின் வேகத்தால், ஆகாயத்திலிருக்கிற நக்ஷத்திரமண்டலம்

சிதறிப்போய்த் தன்னிலையைவிட்டு வழுவி, நீலநிறமுள்ள வானத்தில் ஆயிரக்கணக்காக வாரியிறைக்கப்பட்டதுபோல், நுரைகளின் நிலைமையிருந்தது. அஸ்தமிக்கிற கதிரின் மிருதுவான கிரணங்கள், நன்றாய் உருக்கப்பெற்ற பொன்னைப்போல் பிரகாசித்தன.

சமுத்திரக்கரையிலிருந்து சிறிது தூரத்தில் ஐரோப்பியர்களின் கப்பலொன்று, வெண்மையான பாய்களைவிரித்துப் பெரியதோர் பறவைபோல் சமுத்திரமத்தியில் போய்க்கொண்டிருந்தது. கடற்கரையில், மிகவும் வெண்மையானதும் பூப்போல் மிருதுவானதுமான மணல் விஸ்தாரமாகப் பரவியிருந்தது. மணிராஜன் கடற்கரையில் வீற்றிருந்தான். அஸ்தமிக்கும் வேளையில், சுவர்ணமயமான கிரணங்களுடன், சூரியன் கடல்நீரின்மேல் பிரகாசிப்பதை அவன் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

சிறிதுநேரம் அவன் சமுத்திரத்தின் வனப்பை அநுபவித்துக் கொண்டிருந்தான். பிறகு சாயங்காலத்தின் இருளானது, சமுத்திரத்தின் கறுத்த ஜலத்தின்பேரில் விழுந்து மூடிக்கொண்டது. அப்பொழுது மணிராஜன் காபாலிகனது ஆசிரமத்தை நினைத்தான். அதை அடையவேண்டுமென எண்ணிப் பெருமூச்சுவிட்டான். அச்சமயம் அவன் எப்பொழுதோ அனுபவித்ததான சௌக்கியம் ஞாபகத்துக்கு வந்தது. அது என்னவென்று வர்ணிக்கமுடியாது.

அவன் சமுத்திரக்கரையை விட்டுப் பின்புறமாகத் திரும்பினவுடன், ஓர் அபூர்வமான உருவத்தைக் கண்டான். அது கம்பீரமாய் ஒலித்துக்கொண்டிருக்கிற சமுத்திரத்தின் கரையில் மணல் மேட்டின்மேல், தெளிவற்ற மாலைவெளிச்சத்தில் நின்றுகொண்டிருப்பதான அழகுள்ளதொரு பெண்ணுருவம். அவ்வுருவத்தின் அடர்ந்த கூந்தலானது, பின்னப்படவுமில்லை, கட்டப்படவுமில்லை; கற்றைகற்றையாக முழங்காலுக்குக்கீழ்வரை தொங்கிக்கொண்டிருந்தது. அந்தக் கூந்தலுக்கிடையில் இரத்தினம்போன்ற அவளது தேகமானது, ஒரு சித்திரத்தின்மேல் மற்றொருசித்திரம் வரையப்பட்டதுபோற் காணப்பெற்றது. கூந்தற்கற்றையால் மறைபட்டிருந்ததால், அவ்வுருவத்தின் முகமண்டலம் நன்றாகத்தெரியவில்லையென்றாலும், மேகம் விலகியவுடன் பிரகாசிக்கிற சந்திரனைப்போல்,



அது மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாய் இருந்தது. கண்களோ விசாலமானவை; கடாக்ஷங்கள் மனோகரமானவை; அசைவற்றவை; கம்பீரமானவை; மிகவும் ஒளியுள்ளவை. சமுத்திரமத்தியில் விழுந்து விளையாடிக்கொண்டிருக்கிற சந்திரகிரணங்களைப்போல், அவைகள் அழகுள்ளவையாயும் பிரியத்தைத்தருவனவாயுமிருந்தன. கூந்தற்கற்றைகளால், அவளது தோள்களும் புஜங்களும் மறைக்கப்பட்டிருந்தன. தோள்கள் முழுதும் தெரியவில்லை. புஜங்களின் அழகும் காந்தியும் சற்றுத் தெரியவந்தது. தன்தேகத்தில் அந்தத்தேவி யாதொரு ஆபரணமும் அணியவில்லை. அவளது உருவத்தில் அபூர்வமானதோர் மோகினிசக்தி விளங்கிற்று. அதை இன்னதென்று எடுத்துச்சொல்ல இயலாது. பிறைச்சந்திரனிடமிருந்து வெளிப்பட்டதான நிலவின் நிறமும், நெருங்கியடர்ந்திருக்கிற கூந்தற்கற்றையும் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று அழகை வளர்ப்பதையும், கம்பீரமான ஒலியுடன்கூடிச் சமுத்திரம் விளங்குவதையும், அந்திநேரத்தில் ஒருவன் தானாகவே கண்டு அனுபவித்தாலொழிய அவனுக்கு வேறொருவனால் அந்த அழகை வர்ணித்துச்சொல்ல முடியாது.

இவ்வேளையில் மணிராஜன் அசைவற்றுநின்றான். ஆச்சரியத்தால் அவனுக்கு ஒன்றும் சொல்ல நாவெழவில்லை. அந்த 'ரமணி'யோவென்றால், அசைவற்றுநின்றுகொண்டு, தனது விசாலமான கண்களின் பார்வையை மணிராஜன்முகத்தில் வீழ்த்தினாள். அவ்விருவர் பார்வையிலும் இந்த வேறுபாடு காணப்பட்டது. மணிராஜன் பார்வை பயத்தையும் ரமணியின் பார்வை துக்கத்தையும் காட்டியது.

நிர்ஜனமான சமுத்திரக்கரையில், அவ்விருவரும் சற்றுநேரம் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிறிதுநேரம் கழித்து, ரமணியின் பேச்சொலி மணிராஜன்காதில் விழுந்தது. மிகவும் மிருதுவான குரலில் "வழிப்போக்கரே! நீர் பாதைதவறிவிட்டீர்போலிருக்கிறது" என்று அவள் சொன்னாள். இந்தக் குரலைக் கேட்டவுடன் விடையளிக்க மணிராஜனுக்கு நாவெழவில்லை. அந்த ரமணியின் வார்த்தைக்கு அர்த்தமென்ன? எவ்விதமான பதில்

உரைப்பது என்று, அவனுக்குத் தோன்றவில்லை. அவளது இசை, மகிழ்ச்சிநிறைந்ததாய் எப்போது அவன் காதில் ஒலித்ததோ, அப்போது கடலின் சத்தம் மிகவும் குறைவாகவே அவன் காதில் விழுந்தது. பிறகும் அவ்வார்த்தைகளே கேட்கப்பட்டன.

மகாசமுத்திரத்தை ஆடையாய்க்கொண்ட பூமியும் அழகு வாய்ந்தது. அந்த 'ரமணி'யும் அழகுவாய்ந்தவள். அவள் குரலும் மதுரமானது. அவன்மனத்தினிடை அழகின் பெருக்கே குடிகொண்டது.

ஒருவிதமான பதிலும் தராமையால் 'ரமணி' வருவீராக என்றுரைத்து முன்சென்றாள். அவளுடைய காலடிகள் மணிராஜனுக்குப் புலப்படவில்லை. வசந்தகாலத்தில் மந்தமாருதத்தால் அசைக்கப்பெற்ற வெண்மேகத்தைப்போல், அந்தக் காலடி சென்றுகொண்டிருந்தது. மணிராஜனும் தந்தப்பதுமைபோல் பின்பே சென்றான். நான்குபக்கத்திலும் காடாக இருந்தது. அந்தக்காட்டில் நுழைந்தவுடன் ரமணியைக் காணவில்லை. சிறிதுதூரம் சென்றவுடன் மணிராஜனுக்கு எதிரில் காபாலிகனது குடிசை புலப்பட்டது.

---

## ஆறும் அதிகாரம்.

### காபாலிகனுடன்.

கஶ்ம் நிகலஸம்யதாவஸி । ஊரூதம் நயாமி ஸவதீதிதஃ ।

(ரத்நாவளி)

[ஏன் விலங்கினுற் கட்டுப்பட்டிருக்கிறாய்? உன்னைச் சீக்கிரம் இவ்விடமிருந்து கூட்டிப்போவேன்.]

மணிராஜன் ஆச்சிரமத்தில் நுழைந்து கதவைச்சாத்திக்கொண்டு, தன் தலையிற் கையைவைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். நிமிர்ந்துபார்க்கவில்லை. இவள் தேவியோ? அல்லது காபாலிகனது மாயையோ? என ஆலோசித்துக்கொண்டிருந்தான். அவன் ஒருவிதமான முடிவுக்கும் வரவில்லை. அதையே சிந்தித்துக்கொண்டிருந்ததால், அவன் வேறொன்றையும் காணவில்லை. குடிசைக்குள் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. 'சந்தியாவந்தனம்' செய்யவில்லையென்று அப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. ஜலத்தைத் தேடிப்பார்த்துச் சந்தியாவந்தனத்தை முடித்து, அங்கிருந்தவையான அரிசி முதலிய சமையல்வஸ்துக்களையெடுத்து ஒரு மண்பாண்டத்தில் அன்னத்தைச் சித்தம்செய்து உணவுகொண்டான்.



மறுநாட்காலையில் புலித்தோற்படுக்கையிலிருந்து எழுந்து, கடற்கரையைநோக்கிச் சென்றான். முந்தினநாள் அங்குமிங்கும் அலைந்து திரிந்ததால், வழிதெரிந்துகொள்வதில் அவனுக்குக் கஷ்டம் ஏற்படவில்லை. அவன் காலைக்கடன்களை முடித்துச் சுற்றித்திரிந்துகொண்டிருந்தான். முந்தினநாள் எதிர்ப்பட்ட மோகினி உருவம் இவ்விடம் வருமோவென, ஓர் இடத்தில் காத்திருந்தான். அவனுக்கு அந்த எண்ணமே மிக்கிருந்தபடியால் அவ்விடத்தைவிட்டு அவனால் போகமுடியவில்லை. வெகுநேரம்வரையில் அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தான். அந்த ரமணி வரவில்லை. மனித அரவமே கிடையாது. அவன் முயற்சி வீணாகிவிட்டது. மறுபடியும் சுற்றிப்பார்த்து அவ்விடத்திலேயே உட்கார்ந்தான். சூரியாஸ்தமனமாகி, இருள்வந்து மூடிக்கொண்டது. ஆசையற்றவனாகி, அவன் ஆசிரமத்தை நோக்கிப் புறப்பட்டான். அதில் நுழைந்து பார்க்கும்போது, அங்கே மௌனமாய் வீற்றிருக்கும் காபாலிகனைக் கண்டான். அவனையணுகி, மணிராஜன் சிலவார்த்தைகள் சொல்லியும், அவன் பதிலே உரைக்கவில்லை. "இதுவரை எனக்குப் பிரபுவின் தரிசனம் கிடைக்கவில்லையே! அதற்குக்காரணம் யாதோ?" என வினயத்துடன் மணிராஜன் சொன்னான். "எனது விரதத்தை அநுஷ்டித்துக்கொண்டிருந்தேன்," எனக் காபாலிகன் பதிலுரைத்தான். மணிராஜன் தனது ஊர்போய்ச் சேரவேண்டுமென்று தன் எண்ணத்தைத் தெரிவித்துச் சொன்னான்; "எனக்கு வழிதெரியவில்லை. கையிற் கட்டுச்சாதமுமில்லை. எப்பொழுது பிரபுவின் தரிசனம் எனக்குக் கிடைத்ததோ, அப்பொழுதே நான் ஊர்போய்ச்சேர்வேன் என எனக்கு நம்பிக்கை பிறந்தது," என்று வினயத்துடன் சொன்னான்.

"என்னுடன் வா", என்றுசொல்லிக் காபாலிகன் எழுந்திருந்தான். வேறுவழியில்லாமல் மணிராஜன் அவனுடனே சென்றான். அப்பொழுது மாலைவெளிச்சம் முழுதும் மறையவில்லை. காபாலிகன் முன்னே செல்ல, மணிராஜன் அவன் பின்னாலேயே சென்றான். திடீரென்று மணிராஜனது முதுகில் மிருதுவான 'கரஸ்பர்சம்' பட்டது. திரும்பிப்பார்த்து அவன் திகைத்துநின்றான். கணுக்கால்வரை தொங்குகிறதான, 'அளகபாரம்'வாய்ந்த 'வனதேவதை'யொன்று தோன்றி முன்போல் அசைவற்றுநின்றது. அந்த 'ரமணி', விரல்களால் தன்வாயைப்பொத்திக்கொண்டிருந்தாள். தன்னைப் பேசக்கூடாதென்று, அவள் தடுப்பதாக மணிராஜன் தெரிந்துகொண்டு, பேசாமல் நின்றான். காபாலிகன் விரைந்துபோய்விட்டதால், இதை அவன் பார்க்கவில்லை. காபாலிகன் சிறிதுதூரம் சென்றவுடன் மணிராஜனது காதில் இவ்வார்த்தை விழுந்தது:— "எங்கேபோகிறீர்; போகாதீர்; எங்கேயாவது ஓடிவிடும்" என்று. இவ்விதமுரைத்துப் பதில் வார்த்தையை எதிர்பாராமலே அந்த 'ரமணி' எங்கேயோ போய்விட்டாள். மணிராஜனுக்குஒன்றும்தோன்றவில்லை. "இதுகனவோ? நினைவோ? கண்டது வீணோ?" என்று அவன் திகைத்துநின்றான். அந்த ரமணி எங்கே போனாளென்று அவனுக்குத் தெரியவில்லை. "இது எவனுடைய மாயையோ? அல்லது எனது பிரமைதானோ? ஒருகால் இந்த மந்திரவாதி எதுவும் செய்யவல்லவன். நான் ஏன் ஓடவேண்டும்? அவனும் மனிதன்; நானும் மனிதன்."

மணிராஜன் இவ்விதமாகச் சிந்தையில் ஆழ்ந்திருக்கும்போது, காபாலிகன் திரும்பி "என்னுடன் வருவதில் தாமதமேன்?" என வினவினான். மணிராஜன் பதிலொன்றுமுரைக்காமல் அவன் பின்னே சென்றான். சிறிதுதூரம் சென்றவுடன் ஒரு வீடு தோன்றிற்று. அதற்குப் பின்புறம் மணல்நிறைந்ததான கடற்கரை. அந்தவீட்டிலிருந்து காபாலிகன் மணிராஜனை மணல்நிறைந்ததோரிடத்துக்கு அழைத்துப்போனான். மணற்றரையில் முன்கண்ட 'ரமணி'யே வந்து மணிராஜன்பக்கத்தில்நின்று "இப்பொழுதே ஓடிப்போவீராக; மனித மாம்சமில்லாமல், தாந்திரீகர்களின் பூஜை நடவாது; அதை நீவிர் அறிந்திலீர்போலும்," என்று மணிராஜன் காதில் மெதுவாக உரைத்தாள். அவள் நெற்றியில் வியர்வை சுரந்தது. அதிர்ஷ்டக்குறைவால் 'ரமணி'யின்வார்த்தை காபாலிகன்



காதில் விழுந்தது. ஹோ! சுந்தரி! என்று அவன் கூப்பிட்டான். அவனுடைய சத்தம் மேககர்ஜனம்போலிருந்தது. ஆனால் சுந்தரி யாதொருபதிலும் சொல்லவில்லை.

காபாலிகன் மணிராஜனைக் கையிற்பிடித்து இழுத்துக்கொண்டு போனான். அவன் கைப்பிடியால், மணிராஜனுடையகையில்இரத்தம் சுரந்தது. 'கையை விட்டுவிடுமையா' என மணிராஜன் உரைத்தும் அவன் விடாததால் "எங்கே கூட்டிப் போகிறீர்," என்று மறுபடியும் கேட்டான்.

காபாலிகன்:— பூஜாஸ்தானத்துக்கு.

மணிராஜன்:— எதற்காக?

காபாலிகன்:— பலிகொடுக்க.

மணிராஜன் மிகவும் பலமாகத் தன் கையை இழுத்தான். அந்த வாலிபன் இழுத்த இழுப்பினால், வேறொருவனாயிருந்தால், அவன் கீழே விழுந்திருப்பான். ஆனால் காபாலிகன் நின்ற நிலையை விட்டு நகரவில்லை. காபாலிகன்கையில் மணிராஜன் கணுக்கை (மணிக்கட்டு) சிக்கியிருந்தது. மணிராஜன் ஒன்றும் செய்ய முடியாமல், அவனுடனே சென்றான். மணற்றரைமீது முந்தினநாள் போலவே அக்கினி ஜ்வலித்துக்கொண்டிருந்தது. நாலுபக்கங்களிலும் தாந்திரீகபூஜைக்கு வேண்டிய பதார்த்தங்கள் நிறைந்திருப்பதையும், அதன் நடுவில் சாராயம் நிறைந்ததோர் கபாலம் வைக்கப்பட்டிருப்பதையும் மணிராஜன் கண்டான். அதற்கு முன்பே காபாலிகன் எங்கிருந்தோ காய்ந்த காட்டுக்கொடிகளைக் கொணர்ந்து அங்கே வைத்திருந்தான். அக்கொடிகளால் அவன் மணிராஜனை இறுகக் கட்டினான். தன்னை விடுவித்துக்கொள்ள, மணிராஜன் எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. வயதான போதிலும், காபாலிகனுக்கு ஒரு மதயானையின்வலிமையிருந்தது. தன்னை விடுவித்துக்கொள்ள மணிராஜன் முயன்றதைப் பார்த்துக் காபாலிகன் "அடே முட்டாள்" என்று கர்ஜித்தான். "ஏன் உன் வலிமையைக் காட்டுகிறாய்? உனது ஜன்மம் இப்பொழுது 'ஸபல'மாகும். பைரவீதேவியின்பூஜைக்காக உன் தேகமான மாம்சபிண்டம் அர்ப்பணம்செய்யப்படும்; உலகத்தில் உன்னைப்போல் பாக்கியசாலி எவன் இருக்கிறான்?" என்று காபாலிகன் கோபத்துடன் உரைத்து, மணிராஜனை இறுகக்கட்டி அந்த மணற்றரையின்மீது போட்டான். பிறகு பலிகொடுப்பதற்காகப் பூஜை

செய்யத்தொடங்கினான். மணிராஜன் தன்னை விடுவித்துக்கொள்வதற்காக எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. மணிராஜனோ தனக்கு மரணம் கிட்டிவிட்டதெனத் தனது இஷ்டதேவதையை நினைத்துத் தியானித்துத் தோத்திரம்செய்துகொண்டிருந்தான். அப்போது அவனுக்குத் தன்னுடைய ஊர்நினைவு வந்தது. வெகுநாளாகக் காணாத, தன் தாயாரைநினைத்து உருகினான். அவன் கண்களில் நீர்சுரந்து மணலில் தாரைதாரையாய்விழுந்தது.

காபாலிகன் பூஜையைமுடித்துப் பலிகொடுப்பதற்காகக் கத்தியைத் தேடிப்பார்த்தான். அது அகப்படவில்லை. முதல்நாள் ஞாபகத்துடன் வைத்திருந்த இடத்திலேயே தேடியும் காணவில்லை. அவன் குடிசையைநோக்கிச்சென்று சுந்தரியைக் கூப்பிட்டான். அவள் யாதொருபதிலும் சொல்லவில்லை. அவனுடைய கண்கள் சிவந்தன; புருவங்கள் துடித்தன. மிகவும் விரைவாகத் தன்னுடைய வீட்டைநோக்கிச் சென்றான். இச்சமயத்திலும் மணிராஜன் தன்னுடைய கட்டுக்களை அவிழ்த்துக்கொள்ளமுயன்றும், அவனால் முடியவில்லை.

இந்தச்சமயத்தில் மணலின்பேரில் மிருதுவானதும் கோமளமானதுமான காலடி பதிதலால் எழும் சத்தம் மணிராஜன் காதுகளில் விழுந்தது. காபாலிகனே மெதுவாக வருகிறானோவென அவன் திரும்பிப்பார்த்தான். அதே மோகினியான சுந்தரி! அவளுடைய கையில் கத்தி மின்னிக்கொண்டிருந்தது. அவள் சொன்னாள்:—“வாயைத்திறவாதீர்; ஒன்றும் பேசாதீர்; என்கையிற் கத்தியிருக்கிறது”. இவ்விதம் உரைத்து, கத்தியால் மணிராஜன் கட்டுகளைச் சேதித்தெறிந்து, “சீக்கிரம் ஓடிவிடும்; என்னுடன் வாரும்; நான் உமக்கு வழிகாட்டுகிறேன்.” என்று மெதுவாக அவள் சொன்னாள்.

இவ்விதமுரைத்து வெகுவேகமாக, வழியைக் காட்டிக்கொண்டு, சுந்தரி முன்பே சென்றாள். மணிராஜனும் தாவித்தாவி, அவளுக்குப் பின்னாலேயே சென்றான்.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி.

---

ஸ்ரீ:

# ஒலியெழுத்துக்கும் உருவம் உண்டு.

[உஎஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

செறிப்பச் சேறலானும் செறிப்ப வருதலானும் என்ற இரண்டேதுக்களைக்கொண்டு, ஒலியெழுத்துக்கள் எறிபந்துபோலச்செல்லுதல் வருதலுடைமையால் உருவுடைப்பொருளாமென்று ஒருவாறு விளக்கப்பட்டதேயாயினும், அவ்வெழுத்தொலி கட்புலனாகாமை பற்றித் தெளிவுபிறவாதென்பதுகருதி ஆசிரியர் பின்னும் பல ஏதுக்களால் விளக்கத்தொடங்கி ‘இடையெறியப்படுதலானும்’ என்றற்றொடக்கத்து ஏதுக்களாலும் ஒலியெழுத்துக்களுக்கு உருவமுண்டென்று தெளிவிக்கிறார்.

(3) ‘இடையெறியப்படுதலானும்’ என்றது மூன்றாவது ஏதுவாசகம். இதன்கண் உள்ள ‘இடை’ என்பதன் பொருளும் ‘எறியப்படுதல்’ என்பதன்பொருளும் சிறிது நுணுகியாராயத்தக்கன.

‘இடை’யென்பது இடவிசேடத்தையுணர்த்துவதொரு பெயர்ச்சொல்; அவ்விடவிசேடம் முதல் கடை என்னும் இரண்டிடவிசேடங்களுக்கு இடையே அறியக்கிடப்பதொன்றாம். எழுத்தொலிநிகழ்ச்சிக்குத் திசையும் காலமும் இடமாதலால், அவ்விடையென்பது திசைப்பொருளிடையும் காலப்பொருளிடையுமென அறியக்கிடக்கின்றது.

ஆகவே, முதலும் கடையுமாகிய இடவிசேடங்கள் பாழாயிருக்க அவற்றினிடையே எறியப்படுதலால் என்பது போந்த பொருளாயிற்று.

இனி, எறியப்படுதலாவது: வழங்கப்படுதலாம். இஃது இலக்கணைச்சொல். வழங்குதலைப் பிரயோகித்தல் எறிதல் என வழங்குதலுண்டு. இதனை, சொல்வழங்குதலைச் சொற்பிரயோகம் பதப்பிரயோகம் என வழங்குதலாலும், படைவழங்குதலைப் பாணப்பிரயோகம் அஸ்திரப்பிரயோகமென்பதனாலும், படையெறிதலைப் படைவழங்கலென்பதனாலும் அறியலாம்.

இக்காலத்தார் சொல்வழங்குதலை (சப்தப்பிரயோகத்தை)ச் சொற்பொழிவு என இலக்கணைச்சொல்லால் வழங்குகின்றனர்;

அவ்வாறே சப்தப்பிரயோகவிசேடமாகிய எழுத்தொலிப்பிரயோகத்தை (-எழுத்தொலி வழங்குதலை) எறிதல் என்னும் இலக்கணைச்சொல்லால் வழங்கக்கருதி இடையெறியப்படுதலால் என்றார்.

இனி எழுத்தொலிநிகழ்ச்சி தேசமாகிய இடம்பற்றி நிகழ்வுழி எறிபடைபோல வீசீதரங்கநியாயத்தாலும் கதம்பமுகுளநியாயத்தாலும் ஒரு வரையறைப்பட்ட இடம்பற்றிச் செல்லாநிற்கும்.

வீசிதரங்கநியாயத்தாற்செல்வதாவது: அசையாதிருக்கும் ஒரு நீர்நிலையில் இடையே ஒரு கல்லை எறியுங்கால் அக்கல்லெறி குறியினின்றும் நாற்புறமும் சூழ நீரலை எறியத்தொடங்கி ஒன்றினின்றொன்றுதோன்றி விரிந்து வட்டவடிவுடன் சேய்மைக்கட் செல்வதுபோல, எழுத்தொலியும் அதனை வழங்குவோ (எறிவோ) னிடத்தினின்றும் ஒன்றினின்றொன்று சூழத்தோன்றி வட்ட வடிவாய்ச் சேய்மைக்கட்செல்லுதலாம். இதனால் எழுத்தொலியும் வட்டவடிவுடையதென்பது பெறப்படும்.

கதம்பமுகுளநியாயத்தாற்செல்வதாவது: கடம்பின் மொட்டுத் தோன்றுமளவில் சிறிதாய் உருண்டைவடிவாகத் தோன்றி, சூழ்ந்தகன்று ஆழ்ந்து உயர்ந்த கோளவடிவாய்க் கொண்டே பெரிதாகப்பருப்பதுபோல, எழுத்தொலி நாற்புறங்களிலும் மேலும் கீழும் ஒருங்குசென்று கோளவடிவாக விரிவது.

இவ்விருவகை நியாயத்தாலும் எழுத்துக்கு உருவமுண்டென்பது பெறப்பட்டது.

இனி, காலமாகிய இடவிசேடத்தினிடையே எறியப்படுதல் பற்றிக் குறிலும் நெடிலும் அளபெடையும் முதலிய எழுத்தொலிகள், குணிலும் குறுந்தடியும் நெடுந்தடியும்போல உருவுடையனவாம். இவ்வடிவு காலம்பற்றிநிகழ்வதெனக் கொள்ளத்தகும்.

இவ்வடிவம் கட்புலனாகாமைக்குக் காரணம் அவ்வெழுத்தொலிகளில் நிறமில்லாமையேயாம். இருட்டறையில் நிறந்தோன்றாத குறுந்தடி நெடுந்தடி முதலியவற்றின் வடிவம் கையாற்றடவியறியும்போது கண்ணின்வேறாய பரிசேந்திரியத்துக்குப் புலனாவது போல, குறிலும் நெடிலும் முதலிய எழுத்தொலிவடிவமும் கண்ணின் வேறாயுள்ள சுரோத்திரேந்திரியத்துக்குப் புலனாகின்றது. (இது முன்பும் கூறப்பட்டது.)



(4) 'இன்பதுன்பத்தையாக்கலானும்' என்றது நான்காவது ஏதுவாசகம். இதுவும் எழுத்தொலிக்கு உருவமுண்டென்பதை விளக்கவந்ததாம். [ஒலி இன்பதுன்பத்தையாக்கல் யாழ் பறையொலிகளால் அசுணத்தின்கண் ணறியலாம்.]

இதன்பொருள்: எழுத்தொலிகள் மெத்தெனவையும் வெட்டெனவையும் முதலிய தன்மைவேறுபாடுகளால், கேட்போர்க்கு இன்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்குதலான் என்பது.

எழுத்து வெட்டெனவையும் மெத்தெனவையுமுடைத்தாமாறு வல்லின மெல்லின ஓசைகளால் அறியலாம்.

இவ்வேது, இன்பதுன்பங்களையாக்குமியல்புடைய மென்கால் கடுங்கால் முதலியனவெல்லாம் கட்புலனாகாத அளவுபட்டவடிவமுடைமையால் உருவப்பொருளாகவே இருத்தலின் அப்பெற்றித்தாய எழுத்தும் கட்புலனாகாதவுருவப்பொருளேயாமெனச்சாதித்து நின்றது. காற்றுக்குக் கட்புலனாகாதவடிவுடைமையாவது நிறமின்றிப் பரிசமுடையதாய் அளவுடையதாதல்.

(5) 'உருவுமுருவுங்கூடிப்பிறத்தலானும்' என்பது ஐந்தாவது ஏதுவாசகம். இதுவும் எழுத்தொலிக்கு உருவமுண்டென்பதை விளக்கவந்தது.

இதன்பொருள்: நாமுதலிய உருவுடைப்பொருள் ஒன்றோடொன்று கூடுங்கூட்டம் காரணமாகத் தோன்றலால் என்பது.

இவ்வேது, உருவுடைப்பொருள்களாகிய விசிறி முதலிய கருவிகளின்கூட்டத்தாற் றோன்றும் காற்று, கட்புலனாகாத உருவுடைப்பொருளாயேயிருத்தலின், நாமுதலிய உருவுடைக் கருவிகளின்கூட்டத்தாற் றோன்றும் எழுத்தொலியும் கட்புலனாகாத உருவுடையதேயெனச் சாதித்துநின்றது.

(6) 'உந்திமுதலாகத்தோன்றி எண்வகைநிலத்தும் பிறந்து கட்புலனாந்தன்மையின்றிச் செவிக்கட்சென்றுறும் ஊறுடைமையானும்' என்பது ஆறாவது ஏதுவாசகம். இதுவும் எழுத்தொலி உருவப்பொருளாமென விளக்கவந்தது.

இதன்பொருள்: வாயுவால் எழுப்பப்பட்டு உந்தியினின்றுந் தோன்றி எழுத்துக்கட்கோதிய பிறப்பிடமெட்டின்கண்ணும் புலப்படும்வகை பிறந்து கண்ணுக்குப் புலனாதலின்றிக் காதின்கட் சென்று புலப்படுதலுடைமையான் என்பது.

எண்வகைப் பிறப்பிடங்களாவன:—தலை, மிடறு, நெஞ்சு,பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்பன. உறும் ஊறு என்பது காணுங்காட்சி என்பதுபோல் நின்று, செவிப்புலனுதல் என்னும் பொருள்பட்டுநின்றது. ஊறு—பரிசம்போற் புலனுதல்; (இது குறிப்பு.)

இவ்வேது, எழுத்தொலி வாயுவால் எழுப்பப்பட்டுப்பிறந்து அவ்வாயுப்போலக் கட்புலனுதலின்றிச் சென்று, அவ்வாயு உடலின்கண் உற்றுப் புலனுதல்போலச் செவியின்கண் உறுதலுடைமையால் அது வாயுவைப்போலக் கட்புலனுகாதவுருவமுடையதெனச் சாதிப்பதாயிற்று.

(7) 'விசும்பிற்பிறந்து இயங்குவதோர் தன்மையுடைமையால்' என்பது ஏழாவது ஏதுவசனம்.

இதன்பொருள்: எழுத்து தான் தோன்றும்பொழுதே ஆகாயத்தின்கண்ணேதோன்றி ஆங்கு இயங்குந்தன்மையுடைமையால் என்பது. இது எழுத்து உருவாவதோடு ஆகாயத்தின்பண்பெனவும் விளக்கவந்ததுபோலும். எழுத்தொலியைக் காற்றின்குணமென்றது ஆராயத்தக்கது.)

இவ்வேது, எழுத்தொலி விசும்பின்கட்டோன்றலானும் ஆண்டேயியங்கலானும் அவ்விருதன்மையுமுடைய காற்றுப்போல உருவுடையதாமெனச் சாதிப்பதுபோலும்.

தருக்கநூலார் குணத்திற்குப் பண்பும் தொழிலும் இல்லையென்பர். ஆயினும், நச்சினார்க்கினியர் எழுத்தொலியைக் குணமெனக்கொண்டு அதற்குப் பல்வேறு வினையுடைமை கூறியுள்ளார். அங்ஙனம் கூறியது ஞானம்முதலிய ஒருசார்குணங்களுக்குக் கூம்புதல் மலர்தல்முதலிய உண்டென்னும் ஒருசாரார்மதந்தழுவிப்போலும்.

**T. R. வீரராகவையங்கார்,**
உதவிப்பண்டிதர்,
மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.

---



## உள. இல்வாழ்க்கை.

### தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

382. மின்னுரு நுண்ணிடை பாகன் சிராமலை மெல்லியலாய்
எந்நாளு நாமிட ரின்றியன் பாக வினியவின்பம்
பொன்னுரு மாலு மெனவுற்று வாழப் புரிந்ததனுற்
பன்னுரு நாஞ்செய் தவப்பய னேயிந்தப் பான்மொழியே. (க)

### தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

383. தன்னம் புயாடி யார்வாழ் சிராமலைச் சங்கரன்பால்
அன்னம் புயனடைக் கூந்தலுற் ருேனரு ளாங்குயிற்கு
நின்னம் புயமலர் மாலை யணிந்தனை நீயிவணப்
பொன்னம் புயமனை யாளொடும் வாழி புரவலனே. (உ)

### வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்.

384. கானக் கடுக்கை யணிந்தபெம் மான்றென் கயிலைவெற்பில்
ஏனற் புனத்தைப் புரப்பது மாற்றிநம் மில்லினமர்
மானச் சிறைசெய்த போதும்பி னன்பர் வரையுமட்டும்
நானக் கருங்குழ லெங்கொளித் தாயின்ப நல்குமன்பே. (ங)

### தலைமகள் வருந்தாதிருந்ததற்குக் காரணங் கூறல்.

385. நஞ்ச மிளிர்களத் தெம்மான் சிராமலை நன்னுதலாய்
அஞ்ச லெனவன்பர் சொன்னசொன் னுடி யருண்மிகுமுன்
தஞ்ச மதுபுனை யாக்கொண் டனுதினந் தானெனது
நெஞ்ச நிலையில தாகு மயற்கட னீந்தினனே. (ச)

---

382. மெல்லியலாயென்றது தலைவியை நோக்கி. பொன்னுளும் - திருமகளும்.

383. தன்னை நம்பிய உயர்ந்த அடியார்கள். பால் - பக்கத்தில். அன்னம்போன்ற நடையையும் புயல்போன்ற கூந்தலையும் உடைய உமாதேவியார் பொருந்தப்பெற்றவர். குயிற்கு - குயில்போன்ற தலைவிக்கு. நின்னுடைய அழகிய புயத்திலுள்ள மலர்மாலையைக் குயிற்கு அணிந்தனை. பொன் அம்புயம் மனையாள் - பொற்றாமரைப்பூவை இடமாக உடைய திருமகளைப்போன்ற தலைவி.

384. கானம் - முல்லைநிலம். மான - நாண; "நாவி மான மணங் கமழ்ந்து" (தக்க. 34, உரை.) அன்பை எங்கு ஒளித்தாய்?

385. களம் - கழுத்து. தஞ்சமது - பற்றுக்கோட்டை; அது : பகுதிப் பொருள்விகுதி. நெஞ்சம் நிலையிலதாதற்குக் காரணமாகிய மயற்கடலை.

தலைவனைப் பாங்கி வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதல்.

386. அணிதிகழ் பூண்முலை தோளுற நீங்கா தணைத்துமயற்
பிணிதிகழா தின்பம்பெற் றும்வெறுப்பின் றிப்பெட்பமைவாய்
பணிதிகழ் வார்சடை யெம்மான் சிராமலைப் பான்மொழியை
மணிதிகழ் மார்ப வுறுநாண் மயலெங்ஙன் மாற்றினையே. (௫)

பாங்கி மணமனைச் சென்ற செவிலிக்கு இருவ ரன்பும் உரைத்தல்.

387. பண்ணா ரிசையெனப் பாலார் சுவையெனப் பாவைதிகழ்
கண்ணா ரொளியெனப் பெம்மான் சிராமலைக் காரிகையும்
தண்ணார் மலர்த்தொடை யண்ணலு மாரத் தழுவியன்னே
விண்ணா ரிமையவ ரின்பமுங் கீழுற மேவினரே. (௬)

இல்வாழ்க்கை நன்றெனப் பாங்கி செவிலிக் குணர்த்தல்.

388. தன்னைப் புரந்து தலைவனைப் பேணித் தகைபெறுசொல்
மன்னப் புரந்து விருந்தோம்பிச் சோர்வகன் மாண்பமைந்து
பொன்னைப் புரைநின் மகளில் லறநன்கு போற்றலுற்றாள்
என்னைப் புரந்தரு ளெம்மான் சிராமலை யேத்துமன்னே. (௭)

---

386. அணைத்தும். பெட்பு அமைவாய்-விருப்பம் அமைந்த தலைவனே. உறுநாள் - அடையாத காலத்தில்.

387. என இருவரும் ஆரத் தழுவி.

388. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள், 56) என்பதன் கருத்து இதன் முதலிரண்டடிகளில் அமைந்துள்ளது. பொன்னை - திருமகளை. இல்லறத்தை.



மணமனைச் சென்றுவந்த செவிலி பொற்றொடி கற்பியல் நற்றாய்க் குரைத்தல்.

389. தூய கடவுள் கொழுநனென் றேத்தித் தொழுதெழுந்து
நேய மொடுமுன முண்டபி னுண்டு நினதுமகள்
பாய விடைத்துயில் கொள்ளத் துயிலுமெய்ப் பண்புபெற்றாள்
மாய னயன்றொழு மெம்மான் சிராமலை வாணுதலே. (௮)

செவிலி நற்றாய்க்குத் தலைவி மனைவாழ்க்கைத்தன்மை உணர்த்தல்.

390. பாக முறவுண வாக்கிமுன் யார்க்கும் பரிந்தளித்து
மாக முறுவள மோங்கவில் வாழ்க்கையின் மாண்புபெற்றாள்
நாக மணிசடை யெம்மான் சிராமலை நாயகிநின்
மோக மகள்வட மீனென யாரு மொழிந்திடவே. (௯)

செவிலி நற்றாய்க்கு இருவர்காதலும் அறிவித்தல்.

391. பாச மிகத்துயிர் தென்கயி லாச பதியையன்னே
நேச முடனணைந் தானந்த மார்ந்திடு நீர்மையென்ன
வாச மலர்க்குழ லாளு மிறையு மகிழ்ந்தணைந்து
பேச வரிய சுகானந்தத் தென்றும் பிறங்குவரே. (௧௦)

---

389. கொழுநனே கடவுளென் றேத்தி; "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" (நீதிநெறி. 27.) தொழுதெழுந்து: "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" (குறள், 55); உண்டபின் உண்டு............பண்புபெற்றாள்: "அடிசிற் கினியாளை யன்புடை யாளைப், படுசொற் பழிநாணு வாளை - அடிவருடிப், பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால், என்றூங்குங் கண்க ளெனக்கு" (தொல். கற்பு. சூ. 12, ந. மேற்.); "சிறுகாலை யட்டில்புக லருத்தியுறச் சமைத்தல்சுவை திருத்தி யூட்டல், மறுகாலை யென்றுது விருந்தமைத்தன் மகப்பெறுதன் மடநா ணச்சம், பெறுகாலை யின்புறுதல் முன்னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாதல், உறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மங்கர்க்கற் புடையோர் செய்கை" திருக்குற்றாலப். திருநகரச்.31.

390. பாகம் - பக்குவம். முன் அளித்து. மாகம் உறு வளம் - தேவருலகச் செல்வம். மொழிந்திட மாண்புபெற்றாள்.

391. உயிர் ஆர்ந்திடும் நீர்மையென்ன.

## உஅ. பரத்தையிற் பிரிவு.

### காதலன் பிரிவுழிக் காண்போர் புலவிக்கு ஏதுவிதாம் இறைவிக் கென்றல்.

392. மழுவார் தருகரத் தெம்மான் சிராமலை வாணுதலாட்
கெழுவார் தருபுய மன்னன் பவனிக் கெழுந்தருளச்
செழுவார் சிலைகணை தேர்யானை கொண்டிங்குச் சேரின்னார்
குழுவார் தரமகிழ் கோடலி னூடுதல் கூர்தருமே. (க)

### தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல்.

393. யாரொடு நான்சொல்லி யாறுவ னித்துயர் யார்பொறுப்பார்
ஆரொடு மாறணி யெம்மான் சிராமலை யன்னமன்னன்
தேரொடு மேக மதன்கணை மாரி தெறச்சொரிய
வொரொடு கண்படை நீங்கி மயற்கட லெய்தினனே. (உ)

### ஈங்கிது வென்னெனப் பாங்கி வினாதல்.

394. சேற்றூர் கமல மலர்வய ஆரனைச் சேர்ந்துதவப்
பேற்று லனுதின நீங்காமற் பேரின்பம் பெற்றிருந்தும்
நீற்று விருவினை தீர்ப்போன் சிராமலை நேரிழையாய்
ஆற்று வருந்துய ரான்மிக வாடி யயர்வதென்னே. (ங)

### இறைமகன்புறத்தொழுக்கு இறைவி பாங்கிக் குணர்த்தல்.

395. கொந்தார் குழற்பொது மாதரை வேட்டன்பர் கூரருளாற்
றந்தா ரளித்தெனை நீத்தார் கவிஞர் தமிழ்த்தொடையைக்
கந்தார் களிற்றுரி யார்தென் கயிலைக் கருத்தர்க்கன்றிப்
பந்தார் குவிமுலை யாய்பிறர்க் காக்கும் பரிசெனவே. (ச)

---

392. எழு - யானையைத்தடுக்கும் கணையமரம். செழு - செழுமை; "செழுவார் கழல்" (சிந். 142.) பரத்தையர் புருவம் கண் முதலியவைகள் சிலை முதலியனவாக உருவகிக்கப்பட்டன. தலைவன் மகிழ்கோடலின், வாணுதலாட்கு ஊடல் கூர்தரும்; கூர்தரும் - மிகும்.

393. ஆரொடும் - ஆத்திமலருடன். மன்னன் தேரொடும் ஏக. மதன் சொரிய. ஏரொடு கண்படை நீங்கி; ஏர் - அழகு; கண்படை - தூக்கம். மாரி சொரியக் கடல் எய்தினனென்பது ஒரு நயம்.

394. நீ பெற்றிருந்தும்.

395. கொந்து - பூங்கொத்து. வேட்டு - விரும்பி. தம் தார் - தம்முடைய மாலையை. கவிஞர் பிறர்க்கு ஆக்கும் பரிசென்னப் பொது மாதரைவேட்டு நீத்தார் என இயைக்க.



### தலைவியைப் பாங்கி கழறல்.

396. திடமார் தருகற்பி னூற்றம தன்பர் செயலளிபூந்
தடமார் மலரன்றி வச்சிர மேவுமத் தன்மையென்று
வடமார் குவிமுலை யார்மகிழ்ந் தில்லற மாண்பினிற்பார்
விடமார் தருகண்டத் தெம்மான் சிராமலை மெல்லியலே. (ரு)

### செவ்வணி யணிந்து சேடியை விடுத்தல்.

397. சேய களபந் துகிர்செந் துகிலுடை செம்மலரால்
ஆய தெரியல் புனைந்தெழில் செய்தோ ரணியிழையை
நேய மொடுசெல வுய்த்தாள் பரத்தையர் நீண்மறுகில்
தூய மறைப்பொரு ளெம்மான் சிராமலைத் தூமொழியே. (சு)

### அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறல்.

398. அவ்வண்ண மாகிய வெம்மான் சிராமலை யாயிழையாள்
செவ்வண்ண முற்றதன் சீர்வண்ணங் காதலர் தேர்ந்துவர
உவ்வண்ண மோர்மட மாதர்க் கணிந்திவ ளுய்த்தனளேல்
இவ்வண்ண மெவ்வண்ண மென்றே பரத்தைய ரேசுவரே. ()

### பரத்தையர் கண்டு பழித்தல்.

399. பூமா தெனத்தனை யாவருந் தேர்ந்திடப் பூங்கமல
மாமா தனையநம் மூரன் மனைவி மகிழ்ந்துசிவப்
பாமா றணிந்தொரு சேடியை யேவலென் னற்புதநம்
கோமா னுமையிடம் வாழ்வோன் சிராமலைக் கோதையரே. ()

---

396. அளி - வண்டு. வச்சிரம் - சதுரக்கள்ளி. தலைவர் செயலானது வண்டுகள் தடத்திலுள்ள மலரிலன்றிக் கள்ளிமலரிடத்தும் செல்லுமென்னும் தன்மையைப் போன்றதென்றெண்ணி. தலைவனுக்கு வண்டு உவமை.

397. சேய - சிவந்த. களபம் - கலவைச்சாந்து. துகிர் - பவழம். மறுகில் உய்த்தாள். தூமொழி - தலைவி. தூமொழி உய்த்தாள்.

398. அ வண்ணம் - அகரத்தின் இயல்பு; "அகர வுயிர்போ லறிவாகி யெங்கும், நிகரிலிறை நிற்கு நிறைந்து" (திருவருட்பயன், 1.) சீர்வண்ணத்தை. உவ் வண்ணம் - இந்தவிதமாக.

399. பூமாது - பூவின்கண் உள்ள மாது, பூத்தலையுடைய மாது; சிலேடை. என் அற்புதம் - என்ன ஆச்சரியம்.

### பரத்தை உலகியனோக்கிவிடுத்தலின் தலைவன்வரவுகண்டு உவந்து வாயில்கள் மொழிதல்.

400. மையா ரயில்விழி யான்மயல் பூட்டு மயிலனையார்
பொய்யார் புணர்வுறு காதலர் சேடி புதுமைகண்டு
பையா டரவணி யம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மெய்யா ருலகிய னோக்கியிங் கெய்தலின் மெய்ம்மையரே. ()

### தலைமகன்வரவு பாங்கி தலைமகட்குணர்த்தல்.

401. கன்றார் கரத்துப் பரத்தையர் பாலுளங் காதலித்துச்
சென்றார் விரைந்தின்று நம்மனை வாசற் றெருவின்வந்து
நின்றா ரவரை முனியா தெதிர்கொடு நீகனக
மன்றார் சிராமலை மானே பணிவது மாண்புடைத்தே. (௧௦)

### தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.

402. போராத பேறரு ளெம்மான் சிராமலை பேணுமன்பர்
வாராத போதெனை வாட்டும் பசப்பு வரமகிழ்வால்
ஆராத காத லருளி யகன்றிடு மாயின்மின்னே
சோராத நின்மொழி நீப்பதெவ் வாறினிச் சொல்லுகவே. ()

### புணர்ச்சியின் மகிழ்தல்.

403. கார்வளர் சோலைச் சிராமலை யீசர் கழன்மருவிச்
சீர்வளர் பேரரு ளாலின்ப முற்றவர் சீர்மையென
வார்வளர் பூண்முலை மான்மகிழ் வெய்த மருவிமிகக்
கூர்வளர் காதலின் யானின்ப முற்றதென் கூறுவனே. (௧௨)

---

400. புதுமை - செவ்வணியணிந்து வந்தமை. காதலர் இங்கு எய்தலின் மெய்ம்மையர்.

401. கன்று - வளையல். சென்றார் - சென்ற தலைவர். நீ எதிர்கொடு பணிவது மாண்புடைத்து.

402. வர - தலைவர் வர. பசப்பு அகன்றிடுமாயின்.

403. மான் - தலைவி. யான் உற்ற இன்பத்தை யாது கூறுவன்.



### வெள்ளணி யணிந்து விடுத்தல்.

404. திகழ்தரு மாரந் தளவுவெண் டூசுபல் சேடியரோர்
நிகழ்தரு மாறு புனைந்துசென் றாரன்பர் நேருறப்பண்
டிகழ்தரு காலனைக் காய்ந்தோன் சிராமலை யேந்திழையாள்
புகழ்தரு சீர்மக னீன்றுளென் றோகை புகன்றிடவே. (௧௩)

### தலைவன் வாயில் வேண்டல்.

405. தன்னை நினைப்பவர் தம்மான் சிராமலைத் தாழ்குழலாள்
என்னை யெனது குறைநினை யாம லெதிர்கொளவப்
பொன்னை மருவு புலவி தணியப் புரிந்தருள்வாய்
உன்னை யலதிலை மானே யெனக்கிங் குறுதுணையே. (௧௪)

### தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்.

406. பன்னா ளகன்றமை யாலுள நொந்தனள் பாலனைநீ
முன்னாண் முயன்ற தவத்தா லுயிர்த்துநெய் மூழ்கினளால்
இந்நா ளுமையொரு பாகன் சிராமலை யேந்திழையாள்
மன்னா வமய மிதுவன் றெவனுன் மனக்குறிப்பே. (௧௫)

### தலைவன் தன்மனத்து உவகை கூர்தல்.

407. பையா ரரவல்குல் பாகன் சிராமலைப் பைந்தொடியாள்
மையார் விழிமட நோக்கமும் பால்சொரி வார்முலையும்
கையார் குழவியு நெய்யார் படிவமுங் காணமுன்யான்
மெய்யார் தவம்பல வாற்றின னாதலின் மேவியதே. (௧௬)

---

404. ஆரம்- முத்து. தளவு - முல்லை. சேடியர் ஆரம் முதலியவற்றைப் புனைந்து, அன்பர் நேருறச் சென்றார்; புகன்றிடச் சென்றார். ஓகை-உவகை தரும் செய்தி.

405. என்னை எதிர்கொள. பொன் - தலைமகள்.

406. இந்நாள் நெய்மூழ்கினள். அமயம் - சமயம். மன்னா: விளி. எவன் - யாது.

407. அத் தவப்பயன் மேவியது எனச் சொல்வருவித்து முடிக்க.

### தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

408. நன்னுக கன்னியர் போற்றுஞ் சிராமலை நாயகியுன்
தன்னுக மாரும் பசப்பணி காணவுந் தம்மகவைப்
பொன்னுக மாமுலை யூட்டிடல் காணவும் பூபரகம்
முன்னுக மேவிநின் றூரன்பி னுலென் மொழிவதுவே. (கஎ)

### தலைவி உணர்ந்து தலைவனோடு புலத்தல்.

409. சார தபோதனர் சாத்துசெவ் வந்தியின் றூரணியும்
சீரர் சிராமலை யன்னமன் னுமயற் சேரிமின்னார்
பார முலைச்சுவ டார்புயத் தென்முலைப் பால்படினீர்
சோர விழிபதஞ் சேப்பக் கறுப்பர் தொடேலெனையே. (கஅ)

### பாணனை மறுத்தல்.

410. ஆடு மமலன் சிராமலை நேரன்பர்க் காகவென்பால்
நீடு மிசையுறும் யாழ்கொடு பாடுத னீர்மையன்றூற்
றேடு பொருட்குத் தகச்சுக மீந்துபின் றேடகிலாப்
பாடு பெறுநர்முன் பாடு புலைத்தொழிற் பாண்மகனே. (கக)

---

408. நாககன்னியர் வழிபட்டதை, செவ்வந்திப்புராணம், சூரவாதித்தச்சருக்கம், 73-ஆம் பாட்டு முதலியவற்றால் உணரலாகும். பூபர் - தலைவர். அகம் முன்னுக - வீட்டின் முன்னிடத்தே. அன்பினால் நின்றார்.

409. சார தபோதனர் - சாரமாமுனிவர். செவ்வந்தி - செவ்வந்திப்பூ. சாரமாமுனிவர் ஸ்ரீ தாயுமானவரைச் செவ்வந்திப்போதால் வழிபட்டதை, செவ்வந்திப்புராணம், சூரவாதித்தச் சருக்கம், 58–9-ஆம் செய்யுட்களால் அறியலாகும். விழியில் நீர் சோர. பதம் சேப்ப என்றது நின்னை உதைப்ப ரென்ற குறிப்புடையது. சேப்பக் கறுப்பரென்றது முரண்.

பி-ம். 'இருவிழி சேந்து வெகுள்வர்.'

410. அன்பர்க்கு - அன்பரை என்னோடு சேர்த்தற்கு. தேடு பொருட்கு......பெறுநர்-வேசையர்; "நெஞ்சம், அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடு போகம் விற்பார்" (திருவிளை. நகரப். 46.) பாடுபெறுநர் - பெருமைபெற்ற வேசையர்; இகழ்ச்சிக்குறிப்பு.



மூரிமால் யானைக் குலகிரி விழுந்து
முகின்முக டணவுவே தண்டம்
பூரியா விடுத்துங் குறிஞ்சியா மெனவே
பொருவமைத் திடப்பொலி தருமே. (அஉ)

1602 குன்றினுட் குன்றென் றுரைகரித் திரள்கள்
குவலயத் தினில்விழுந் தோட
வன்றிறல் வேடர் தாலவட் டத்தை
வான்கையாற் பற்றியே சுற்றி
யொன்றுகொண் டொன்றை யோச்சல்கண் டரியே
றோடலும் பற்றியே கரிக
ளன்றினர் திணிதோள் களிற்புடைப் பதுகண்
டதிசயித் தனர்முனி வருமே. (அங.)

1603 சேய்த்துறை பிறங்கன் மறவர்வெங் கயத்தின்
றிரளெதிர் வினைகுறித் தயலோர்
கோத்திரத் திரியத் தடக்கையால் வளைத்துக்
[1]குலத்தலைப் புடைத்திடச் சமர்க்கு
வாய்த்தவே திகளா யவர்களு மவையு
மரபினுன் மடிந்தமை சலங்கூர்
மூத்தமூர்க் கரினக் குலத்துளார் வாழ்நாண்
முடிந்ததெற் றற்றெனும் வகைத்தே. (அச)

1604 வடுக்கணப் பொழுதும் விளைந்திடா வுயர்ந்த
மரபுடை முதுகுடிப் பிறந்தார்
நடுக்கணப் பொழுது நயந்திடா வரசர்
நாட்டகத் தணித்திருந் தனரேல்
இடுக்கணுற் றிறப்ப ரென்பதே காட்டு
மிடும்பைவே டருமிபத் திரளும்
அடுக்கநின் றுளவெற் பவைகிளைத் தெறிய
வவைகளத் தனுக்களாம் வகையே. (அரு)

---

[பி-ம்.] [1]குலைத்தலைப். ச.

1605 மென்மைசால் வயிரங் கிளைத்தவேல் வன்மை
மிருந்ததைத் தெறுமெனு முரையைத்
தன்மையாக் கினவே டுவருகிர் றுதிக்குஞ்
சாற்றுதற் குவமைசாலாத
புன்மைசால் களைகள் [1]பன்மையாய்ப் பலகாற்
புடைக்கெதி ரெதிரெறி தரலும்
வன்மையாய் முறுக்கு மருப்புர முழுது
மறவரென் பையுந்துளைத் தமையே. (௮௬)

1606 பொருப்பினைக் கிளைக்கென் பயனினி யெனவே
பூசல்வே டருங்கரித் திரளும்
நெருப்பெழ விழித்து நெருங்கிய வளவி
னீட்டிய கைகடாந் தம்மிற்
றருக்கினாற் பிணங்கிப் பின்னணி யெனலாய்த்
தனிப்பிறை மருப்பினாற் படையாற்
செருக்கினாற் றுக்க வுரம்பிளந் ததொடுஞ்
சிரம்பிளந் திறந்தன ரிறந்த. (௮௭)

1607 இறந்தவே டரும்வன் கடகரித் திரளு
மிறந்தன ரிறந்தன வெனுமத்
திறங்கடாம் வாய்மை யென்பவே கண்டுஞ்
சிந்தையாற் றெளிகிலர் சுரரும்
பிறந்தசீற் றமரு நோக்கொடுந் தடக்கை
பிடித்தநோன் படைகளி னெடுமாண்
மறந்தவா நிலையிற் கிடப்பதே கண்டு
மறலியு மனக்கொளா னவையே. (௮௮)

1608 மீளிவேற் றடக்கை வேடரும் யமனும்
வெருக்கொளச் செருச்செய்தும் பிகளுந்
தூளியாய்ப் புவன மெழப்பொரு திறந்து
துணைக்கணாற் றிசைகளே நோக்க

[பி-ம்.] [1]பன்மையாற். சா.



வாளியின் றிரளு மிருதலைப் பகுவா
யமைந்தபுட் கணங்களுங் கழுகுங்
கூளியா னவையும் பிணமலை களையே
குறுகுதற் கஞ்சிநின் றனவே. (௮௯)

1609 அழுத்துவான் படையும் வளர்பிறை மருப்பு
மாக்கையைக் குறைத்தகா லையினி
விழுக்கிலா வுயிர்கள் புனிதமேன் மையதாம்
யாதனு சரீரமே யெடுப்ப
வொழுக்கெறி குருதிப் பெருங்கட லுகளித்
தொலித்தெழு முவரிநீர்க் கடலுட்
குழுப்பயில் விழுப்புண் பிணமலை களினைக்
கொழித்தன வாய்ச்சுழித் தெறிந்த. (௯௦)

1610 மறமெனக் குறிக்கப் படுபொரு ளன்கு
வகையவா மெழுவகைப் பிறப்பில்
விறன்மிகு மனுக்கள் படிவமாய் வேழ
விலங்கினுக் கமைவடி வழுமாந்
திறமிகுந் தவற்று ளுயிர்கடா மிகலிச்
செருக்களத் திறந்ததுண் மையுமாய்
அறமெனுங் கடவுள் கூட்டியே முடித்த
தன்றியார் முடிப்பவ ரெனலும். (௯௧)

1611 ஆடினா ரமர ரவரொடுங் கலந்தே
யமிர்தவின் னிசைகளைத் திரண்டு
பாடினார் விசும்பிற் கின்னர ரயிரா
பதனினித் துறக்கமென் னதெனச்
சூடினான் வாகை துணைப்புயப் பொருப்பிற்
றாதுவர் யாவரு நமன்பாற்
கூடினார் நின்று றறப்பெருங் கடவுள்
குறைமுடிப் பவற்றையுங் குறித்தே. (௯௨)

1612 ஆண்டகை மறவ ருடன்கரித் திரள்க
ளடுபடை யெனக்கரங் களிஞற்
சீண்டெறி பொருப்பிற் றடலுயி ரிழந்த
கிளைகளைக் கண்ணுறீஇ யயலே
காண்டகு பொருப்பிற் பெரும்புலி பறழ்மேற்
கண்ணறப் பிரிந்தவர வைகண்
மாண்டமை துணிந்து மீண்டவற் றினுக்கு
வளமுலைப் பாலருத் துவவே. (கூரு

1613 கேசரித் திரள்க ளிரிந்தகா லையினிற்
கிளருமிப் பொருப்பென விரிந்த
மாசுணத் திரளு மிருவகைப் பகையு
மடிதலால் வாரணத் திரளைப்
பூசலுற் றருந்தப் பிரிந்தவப் பொருப்பிற்
புகுதலும் புகுந்தன வளிதோய்
தேசுடைத் துணர்மென் மலர்விரி தருவுட்
சேக்கைக டொறும்பற வைகளே. (கூச

1614 உலகமால் வரைப்பொன் முகட்டினி லுதித்தே
யுச்சமெய் தியவுடு பதியுங்
கலகமேல் விளைப்போன் கடைக்கணிற் கனலுங்
கடகரிக் கடைக்கணிற் கனலுஞ்
சுலவுதன் கலையைச் சுடுமென விசும்பிற்
றாண்டினன் விமானமென் பதொடு
மிலகுசேணிடைமேற் கடைந்தனன் யாம
மிறத்தலு மெய்தும்வை கறையே. (கூரு

பதினைந்தாவது:
துணைப்படைவதைப்படுசருக்கம் முற்றும்.

---

ஸ்ரீ:

## கசு. வேடனும் வேழமும் வதைப்படுசருக்கம்.

1615 கணைத்தொடை முதலா மடுபடை துரந்து
கறுவுகொண் மனத்துவெங் களத்துட்
டிணைக்கிரு மையும்பாற் கொருமையுஞ் ¹சிவணிச்
செஞ்சமஞ் சமனெனப் பொருது
துணைப்படை யிறந்த காலையில் யமனுந்
துணுக்குறும் படிகரு வரைபோன்
றிணைத்தெழு புயவே டனுங்கடாக் களிறு
மிகல்விளைத் தமையினிப் பகர்வாம். (க)

1616 மடங்கலென் பவற்றைக் கொழித்தெறி தரங்க
மகரவா ரிதியெனத் தழங்கு
கிடங்கினுட் சிகரப் பனிவரை முழையுட்
கிளரொளி விசும்பின்மா மழையு
ளடங்கவைத் ததொடுந் தென்புலத் தொளிப்ப
தாக்கினு ரிறப்பவே நமனு
நடங்கொளு மதனைக் காண்பவன் பகுவாய்
நகைதரப் புகையெழும் விழியே. (உ)

1617 வான்பகை தோன்ற வான்றுணை தோன்றும்
வகையென வெனக்குத வினராய்க்
கூன்பிறைக் கோட்டுக் கரிகளி னுயிரைக்
கொண்டுயிர் கொடுத்துளார் கொற்றம்
நான்களத் தினிற்கண் டனனித னுடல
நடுங்கயான் பொருதுயிர் குடித்தே
யூன்கழு துணநின் றுடுதல் காணு
துறைந்தன னெனவுழந் தனனே. (ந

1618 காங்களோ ரிரண்டு துணைப்படை யினெடுங்
கால்களொன் றியமதூ துவர்தஞ்
சிரங்கண்மே னடிக்குந் துணைப்படை யிருப்பத்
தின்னிதா யெனதுயிர் மனத்தோ

---

[பி-ம்.] ¹சிவண. சா.

டொங்கெடா திருப்பத் துணைப்படை யிலையென்
றம்பரா னவர் நடித்திடல்கண்
டரந்தையுற் றிடுவதெவன்கொலென் றாழி
யசனியே றெனநடித் திடித்தான். (௪)

1619 கண்ணிறென் மணியாந் துணைப்படையெனுமக்
கரிகனன் கிகல்விளைத் திறந்தொண்
புண்ணினீர்க் கடலு ளாடல்கண் டழுங்கு
போழ்தினி லமரரா டலையுந்
துண்ணென வெரீஇய கூற்றின டலையுந்
தோன்றவே கண்டவே டுவன்றன்
கண்ணகன் படிவந் துணைப்படை யெனவே
களித்துநின் றுடல்கண் டிடுமா. (௫)

1620 குருதியுட் குளித்துப் பகைத்தகோ ளரியின்
குடர்மணி மாலிகை சூடிப்
பருதிபோற் சிவந்து புணர்மருப் பெனவே
பணைதுணைப் படையையும் பார்த்தே
யிருகடைக் கணிறைற் கால்கனன் கிறெடு
மியைந்தமெய்த் துணைப்படை யையும்பார்த்
தொருதனிப் பணைக்கைத் துணைப்படை யையும்பார்த்
தவாக்கட லெனநடித் திடிக்கும். (௬)

வேறு.

1621 *[1]குழித்தது தலத்தொடு நிலத்தையடி வைப்பொடு
குடிற்படர் முகிற்றிரளையே
கிழித்தது புழைக்கையி னடுக்கலை யடுக்கொடு
கிளைத்தது கவுட்கள்வழியே
[2]சுழித்தெழ வுயிர்த்தது மதத்தைவட வைச்சுடர்
தணுக்குற நெருப்பொழுகவே
விழித்தது தெழித்ததுரு முக்குலம் வெருக்கொள
வெயர்த்தது மழைப்பெயலென. (௭)

[பி-ம்.] [1]குழித்தததலத்தொடு நிலத்தையடி வைத்துயர்; [2]சுழித்தெழ மதத்தினை யுயிர்த்தொளிர் கடைக்கன றணுக்குற நெருப்பொழுகவே. மாற.



1622 களித்தது களிப்பொடு மழுப்படை தனைத்[1]திரி
கரத்தினன் முடிக்கணியதாய்த்
தளித்தெழு திரைப்புனித விட்புல நதிப்புனல்
சலத்தொடு தடுத்தொருகையாற்
குளித்தது மலைத்தலை மதுக்கருவி யைப்பசி
கொழுத்தழலி னுக்கவியென
வளித்தது நமற்குள நடுக்குற முழக்கவி
னழைத்தது மறத்தினனையே. (௮)

1623 சிரித்தனன் மயிர்ப்புடை சிலிர்த்தனன் விழிக்கடை
சிவப்புகு சினத்தழலின
லெரித்தன னினத்தரு வினைக்கட லினைச்சிறி
திமைப்பொழுதி னுட்கதுமென
முரித்தன னெயிற்றினை நெரித்தனன் மடித்திதண்
முடக்கிய வினைப்புருவமேவர்
தரித்தனன் விதிர்த்தெதிர் நடத்தனு மதற்கிறை
சலித்தில மதச்சயிலமே. (௯)

1624 முடித்தனன் முளைப்பிறை யினைக்கரு முருட்டுடன்
முடைக்கலை நிமிர்த்துமுடிமே
விடித்தன னடித்தடி பெயர்த்திரு நிலத்தினை
யிணைப்புய நிமிர்த்ததிரவே
பொடித்தன னடற்றிகிரி வெற்பையயல் பொற்பொடு
புடைத்தன னிடக்கைதனையே
பிடித்தன [2]னயிற்படை வலக்கையி னிதற்குயிர்
பிழைப்பெவ னெனக்கருதியே. (௧௦)

இரண்டுந் தொடர்.

வேறு.

1625 மதியாது நிற்குமதவா ரணத்தின்
மறமே மதித்த மறவோன்
முதிர்வா னவர்க்கு நிலையாய வெற்பை
முதலோ டெடுத்த முதலே

[பி-ம்.] [1] தரி. க. [2] னடற்புடை. ச.

யெதிர்கால ஹுட்க வெறிபோழ் துடக்கி
யெதிரே தடுத்து நிழல்கூர்
நுதியார் மருப்பி ஹுனியா ஹுழக்க
நுழைநூறு பட்ட துடனே. (கக)

1626 பிறைவா ளெயிற்று விடநாக மத்தி
பிணேகேழல் பெற்றம் வரையா
டறையார் பொருப்பின் முழையாக முற்று
மடைபாழி பட்ட செவியா
னிறையாயுண் முற்றி யிறுநா ளெனத்த
னிணேவே பெருக்கி யிமையோர்
இறையால் விலக்க வரிதாமொர் வெற்பை
யிடியேறின் விட்ட தெதிரே. (கஉ)

இரண்டுந் தொடர்.

1627 விட்ட வெற்பினே மிக்கு டைச்சமன் விட்புலத்தினுரு
நெட்டு யிர்ப்பொடு தெக்க ணத்திசை நிற்பநிற்றல்பொரு
னெட்டி நெட்டிலே முத்த லேப்படை யைப்பறித்திமையோர்
உட்க வெற்றவு மிற்ற திற்றதை யுற்றதக்கணமே. (கங)

1628 செச்சை பட்டிழி முக்க டத்திரை பெற்றகைக்களிறே
ஹுச்ச விட்புல நற்ற வச்சுர ரொக்கலிற்சிவணு
வச்சி ரக்குலி சத்தை யெட்டி வலக்கைபற்றிவிடா
வச்ச முற்ற சுவற்க வற்கமு மற்றதப்படையே. (கச)
இரண்டுந் தொடர்.

1629 *முப்புரத்தி னேச்செகுத்த முக்கணக்க னிற்சிரித்து
முத்தலேக்க ணிச்சி யுக்கதாற்
றப்பறப் பொருப்பினேக் குலுக்கிடக் கையைச்செருக்
தலத்துறப் புடைத்துருத் தெழா
நெய்ப்புறத் தினிற்குனித்த வச்சிரத் தினேப்பிடித்து
[1]நெட்டுயிர்ப்பொ டுற்றி யக்கவே
குப்புறப் புழைக்கைவெற்பின் மத்தகத் தினேத்துளேத்த
கொப்பிளித்த பச்சி ரத்தமே. (கரு)

[பி-ம்] [1] நெட்டுயிர்ப்புயிர்த்தியக்கவே. மாற.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் | ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) | ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... | ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... | ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... | ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... | ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... | ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... | ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... | ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... | ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... | ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... | ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... | ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... | ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... | ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... | ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... | ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... | ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... | ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... | ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் | ... | | | |
| 30. | ஞானுமிர்தக்கட்டளை ... | ... | 0 | 8 | 0 |
| 31. | பாண்டியம் ... ... | ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... | ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... | ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... | ... | 1 | 4 | 0 |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை | ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... | ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... | ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | | 1 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... | 5 | 0 | 0 |
| 63. | [illegible] பாரிசாத்திரப்பாமாலை ... | 0 | [illegible] | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைகொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.